# நந்தன் : : :

# : : பக்த சிரேஷ்டன்

3691
922.945

'உத்தம ஆசிரியர்', 'கிருஷ்ண தேவராயர்'
முதலியவைகளின் நூலாசிரியரும், முத்தியாலுபேட்டை
உயர்தர கலாசாலையின் உபாத்தியாயருமாகிய,

**கீ. பி. சேஷாத்திரி ஐயங்கார் அவர்கள்**

எழுதியது.

**இரண்டாம் பதிப்பு.**

பிரசுரித்தவர்கள்

**மதராஸ் ப்ரீமியர் கம்பெனி**

புத்தக வியாபாரிகள் : பிரசுரகர்த்தர்கள் :
த்தியாலுபேட்டை, சென்னை.

1927

—து] [விலை அணா ஆறு.

0-,3ᴍ5I,N
N127
128882

PRINTED AT THE
KESARI PRINTING WORKS, MADRAS.

**Copyright registered by the Publishers.**

ஓம்

# முன்னுரை.

நந்தன் தன் பக்தி விசேஷத்தினால் தவச்சிரேஷ்டர்கள் பெறுவதற்கு அசாத்தியமான முத்திப் பதவியை அடைந்தான். தான் இழி குலத்தில் பிறந்திருந்தது அவனுக்குப் பின்னும் பெருமையை அளித்தது. கடவுள் தன் அன்பர்களின் மதம், ஜாதி, அந்தஸ்து முதலிய வித்தியாசங்களைப் பாராட்டாமல் அவர்களது பக்தியையே பெரிதும் கண்டு உவந்து நற்பதவியை அளிக்கின்றார் என்பது இச்சிறிய கதைப் புத்தகத்தினால் கரதலாமலகம் போல் விளக்க முறுகின்றது.

தற்காலத்தில் 'தீண்டாமை ஒழித்தல்' என்னும் பெரும் தாகம் நம்மவர்களிடை எழுந்து மும்முரமாகப் பரவி வருகின்றது. நந்தன் ஆதி திராவிடர் குலத்தில் அவதரித்திருந்தும், தில்லை தீக்ஷிதர்கள் தீண்டாமை என்பதை மிகவும் பாராட்டி வந்திருந்தும், அவனது விசேஷபக்திக்கு அடிமையாகி, தீண்டாமை யென்னும் பந்தத்தை நீக்கித் திருச்சன்னிதானத்துக்குள் எழுந்தருளச் செய்துகொண்டார்கள். எனவே, ஒருவனது மேன்மை பக்தியினாலல்லது குலத்தினாலல்ல என்பதும் புலனாகின்றது.

இன்னும், நந்தன் தன் இனத்தவர்கள் எத்துணையே இடையூறுகள் இழைத்தபோதும், தன்னுடைய பிரயத்தனத்தாலே தான் எண்ணியதை, தான் அடைய விரும்பியதைக் கடைசியில் முடித்துப் பெரும் பதவியை அடைந்தான். இதனால் 'முயற்சி திருவினையாக்கும் முயற்சியின்மை இன்மை புகுத்திவிடும்' என்னும் பொய்யா மொழி விளங்குகின்றது.

சிறுவர் சிறுமிகள் இளம்பிராயத்திலேயே இத்தகைய பக்தி மார்க்க போத புத்தகங்களைப் படித்துப் பழகுவார்களானால் நாளடைவில் பேரின்பத்தை யடைவார்கள் என்பது திண்ணம். ஆகையால் சிறந்த பக்தர்களின் சரித்திரத்தை நமது குழந்தைகளுக்குப் போதிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மேற்கூறிய நோக்கம் கொண்டே இப்புத்தகம் எளியநடையில் எழுதப்பட்டுள்ளது. முதல் பதிப்பு நன்கு மதிக்கப்பட்டமைகண்டு இப் பதிப்பு வெளியிடலானோம். முதல் பதிப்பைப் பள்ளிக்கூடங்களில் வைத் துதவிய தலைமை உபாத்தியாயர்களுக்கு மனமார்ந்த வந்தனம் செலுத்துவதுடன் இப்பதிப்பையும் அதே அன்புடன் ஏற்குமாறு வேண்டுகின்றோம்.

அக்ஷய ஹூ மாசி மீ
'மஹா சிவராத்திரி'

கீ. பி. சேஷாத்திரி ஐயங்கார்.



ஸ்ரீ நடராஜப் பெருமான்.

# நந்தன்.

## I

### நந்தனின் இளம்பருவம்

'தனக்குமேல் தன்நிலை நிறுத்திக்கொள்ளத் திறனறியாத மனிதன் மிகவும் தாழ்ந்தவன்' எனக் கூறியுள்ளார் பெரியோர். 'தனக்குமேல் தன் நிலை நிறுத்திக்கொள்வது' என்பது மற்றெதனாலும் கிடைக்காது. ஒவ்வொரு மனிதனும் தன் இருதயத்தில் மறைந்து கிடக்கும் பக்தியை வெளிப்படுத்தி, விருத்தியடையச் செய்தால் தான் அந்நிலையை எளிதில் பெறலாம். மானிடன் ஒவ்வொருவனும் தமோ குணம், ரஜோகுணம், சத்துவ குணம் என்னும் முக்குணங்களாலானவன். எவ்வளவுக் கெவ்வளவு சத்துவகுணம் ஒருவனிடத்தில் மேம்பட்டு விளங்குகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு மற்றைய இரண்டு குணங்களும் அவனைவிட்டு மறைந்தொழிகின்றன. தனக்குமேல் தன்நிலை நிறுத்திக்கொள்வதில் பக்தி நெறியைக் கடைப்பிடித்து வெற்றி பெற்றவன் நந்தன் ஒருவனே என்று சொல்லின் மிகையாகாது. அந்த நந்தனுக்குத் 'திருநாளைப்

போவார்' என்று மற்றொரு பெயரும் வழங்குவதுண்டு. அதன் காரணத்தைப் பின்னர் அறிவிப்போம்.

இன்றைக்குச் சுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன் ஆதி திராவிடர் குலத்தில் நந்தன் பிறந்தான். ஆரியர்கள் இந்தியாவில் குடியேறுவதற்கு முன் இவ்விடம் தங்கியிருந்த பூர்வ குடிகளின் குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆதி திராவிடர்கள். ஆகவே, அவர்கள் பிறரால் இழிவாக மதிக்கப்பட்டு வந்தார்கள். வேதங்களில் கூறப்பட்ட ஜாதிகள் நான்குதான். அவைமுறையே பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்பன. முதல் மூன்று வருணத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு ஆதி திராவிடன் அருகில் செல்லுவதும் பெரும் பாவம் என்று திரஸ்கரிக்கின்றனர்கள். அவ்வாறு புறக்கணிக்கப்பட்ட புலயர்கள் அயலார் நிலங்களையுழுது, வேலைசெய்து, அவர்கள் கொடுக்கும் தானியத்தைக் கொண்டு தங்களையும் தங்கள் குடும்பத்தவர்களையும் போஷித்து வந்தார்கள். அவர்கள் பணக்காரர்களாக வாகவோ, நிலங்களைச் சொந்தமாக வாங்கவோ அவர்களால் சாத்தியப்படாது. அவர்கள் சம்பாதிக்கும் பொருள் வாய்க்கும் கைக்குமே எட்டாதென்றால் பணக்காரர்களாவது எப்படி? மதவிஷயத்தில் உயர் குலத்தவர்கள் கொண்ட உதாரசிந்தை, புறக்கணிக்கப்பட்ட பஞ்சமர் குலம் வரையில் எட்ட

வில்லை. அந்தக் குலத்தவர்கள் தாங்களாகவே ஒரு சமூகத்தை ஏற்படுத்தி அதற்கேற்ற பழக்க வழக்கங்களை மேற்கொண்டார்கள். அதன் மூல ளுக அநேக துர்ப்பழக்கங்களும், வழிபட பற்பல தெய்வங்களும் அவர்களுக்குண்டாயின. அவர்கள் எவ்விதத்திலும் தாழ்மை யடைந்ததற்குக் காரணம் மற்ற குலத்தவர்கள் தான் என்று உறுதி யாகக் கூறலாகும்.

சென்னை மாகாணத்தில், தென்னுற்காடு ஜில்லாவிலுள்ள ஆதனூர் கிராமத்துப் புலையர் சேரியில் மிகுந்த ஏழ்மையான, நிலைமையுள்ள குடும்பத்தில் நந்தன் பிள்ளையாகப் பிறந்தான். அச்சேரி இப்போதிருப்பதைப் போலவே அந்தக் காலத்திலும் இருந்தது. காற்ருேட்ட மில்லாத ஓரறையுள்ள . அநேக சிறு குடிசைகள், பூசனிக்கொடி படர்ந்த கூரைகளுடன் இருந்தன. அக்குடிசைகள் வரிசையாக விராமல் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்தன. அச்சிறுகுடிசைகளின் வாயில்களில் கரிப்பானைகளும், மிடாக்களும் வைக்கப்பட்டிருந்தன. குட்டிச்சுவர்களும், எலும்புகளும், அழுகிய மாமிசங்களும் அச்சேரியில் நிறைந்திருந்தன. ஒரு பக்கத்தில் கத்திக் கொண்டு காலங்கழிக்கும் சேவல்களும் பெட்டைகளும், மற்ருெருபக்கத்தில் ஓயாமல் நாள் முழுதும் குலைத்துக்கொண்டிருக்கும் நாய்களும், இன்னொரு பக்கத்தில் அடிக்கடி உரத்துக்கூவும்

அலங்கோல ஆடை தரித்த அநாகரிகப் பெண்களும், மற்றோர் புறத்தில், ஒன்றுக்கொன்று விளையாடிக் கொண்டும், சண்டை யிட்டுக்கொண்டும், மைபோல் கறுத்தமேனியும், மாசுபடிந்த தேகமுமுள்ள பல சிறுவர் குழாங்களும் சூழ்ந்திருக்க இவைகளின் நடுவில் நமது பக்த சிரேஷ்டனுன நந்தன் காலங்கழிக்கலானுன்.

நந்தன் குழந்தையா யிருக்கும்போது மற்றப் பறைப்பிள்ளைகளைப் போல் இருக்கவில்லை. அவனுடைய விளையாட்டுக்கள் மற்றவர்களின் விளையாட்டைப் போன்றதல்ல. அவனுக்குக் களிமண்ணினுற் சுவாமிபோல் செய்து அலங்கரிப்பதே பெரிய விளையாட்டு. அவன் சிறுவயதுக்கேற்ற அறிவிற் கெட்டிய விதம் மனதில் தோன்றியவாறு குட்டையாகவும், பருமனுகவும், முறுக்கிய மீசையும், சரிகைத்தலைப்பாகை தரித்த கறுப்பு மேனியுமுடைய உருவங்கள் பல களிமண்ணினுல் செய்வான். அந்த விக்கிரகங்களுக்கு அன்பும் ஆதரவும் தயாளமும், தன்னை யடைந்தவர்க்கு அபயமளிக்கும் தண்ணருளும் ஒருமிக்க அமைந்திருப்பதைப் போலச் செய்வான். அவைகளைச் சுற்றி ஆடுவதும், பாடுவதும், அலங்கரிப்பதும், ஊர்வலம் வருவதும், தன்வயதொத்த சிறுவர்களைப் பக்தகோஷ்டியாகச் சேர்ப்பதும், தன் சுவாமிக்கு அடிக்கடி உற்சவாதிகள் செய்வதும் நந்தனுக்கு முக்கிய விளையாட்டுக்கள்.

ஆதனூர் பிராமண வீதியிலுள்ள சிவாலயத்தின் சிறுகோபுரம் அவனது மனத்தைக் கவர்ந்தது. அந்தக் கோபுரத்தின் அழகையும், கம்பீரத்தையும் கண்டு என்னென்னவோ எண்ணினன். தான் அக்கோவிலின் அருகே செல்லக்கூடாமையினல் இன்னும் ஏதோ அதில் விசேஷம் இருக்கவேண்டுமென்றும் அவன் தீர்மானித்தான். கோபுரத்தின் அழகையும் கம்பீரத்தையும், கோயிலின் இரகசியத்தையும் அறிய வேண்டும் என்ற பேரவா நந்தனுக்கிருந்தது. அந்தப் பேரவாதான் அவனுக்கு முக்தியை அளிக்க முக்கிய காரணமாயிருந்தது. அவன் அடிக்கடி கோயிலின் கோபுரத்தை அண்ணாந்து பார்த்து அதன் உருவத்தையும் அழகையும், கம்பீரத்தையும் கண்டு அதன் உள்ளிருக்கும், தனக்குத் தெரியாமல் மறைக்கப் பட்டிருக்கும் பரம் பொருள் இப்படிப்பட்ட இலக்ஷணத்துடன் இருப்பார் என்று தானே ஊகித்தறிவான். ஏனென்ருல், ஒருவராவது அவனுக்கு இவ்விஷயங்களைக் குறித்து விவரமாகக் கூறும் சக்தி பெற்றவர்களில்லை. அந்தக் கோயிலினின்றும் எப்பொழுதாவது சுவாமி மிகுந்த ஆடம்பரத்துடனும் மேளவாத்தியங்களுடனும் அந்தக்கிராமத்து வீதிவழியே வருங்காலத்தில், தானும் மற்றப்பிள்ளைகளுடன் அந்தக்காட்சியைக் காணச் செல்வான். அப்படிக் கண்ட காட்சியை மனதில் பதித்துக்கொள்ளு

வான். தெய்விகமானவைகள்—கோவில், உற்சவாதிகள், பிராமணர், வேதங்கள்-எதுவாயிருந்த போதிலும் அதை அசட்டை செய்யவே மாட்டான். அந்தக் குணம் அவனுக்குப் பிறவியிலேயே உண்டாயிருந்தது. அவன் தாழ்ந்த குலத்தில் பிறந்திருந்தது இக்குணத்தைப் பின்னும் அதிகரித்தது.

வாலிபப்பருவமடைந்தபோது அவனுக்குப் பக்தியும் வினயமும் விருத்தியடைந்து வந்தன. நாளேறவேற இவைகள் பசுமரத்தில் அறைந்த ஆணியைப்போல் அவன் மனதில் பதிந்துவிட்டன. பகவானுக்கு ஊழியஞ் செய்ய வேண்டுமென்று விரும்பினன். தன் சக்திக்கு ஏற்ற ஊழியம் எவ்வளவு தாழ்ந்ததாக விருப்பினும் அதை மனமுவந்து செய்ய நிச்சயித்துக் கொண்டான். உண்மையான பக்தி இருதயத்திலிருந்து பெருக்கெடுத்து வழியும் வரையில் அதிகரித்துக்கொண்டேவரும். அதன் பின்பு அந்தப் பக்தியானது உள்ளே அடங்காமல் செய்கைகள் மூலமாக வெளிப்பட்டு விடும்.

வெகு நேரம் நந்தன் எந்தக் காரியம் செய்தால் பகவானுக்கு ஏற்கும் என்று சிந்தை செய்வான். எவ்விதத் திருப்பணியை மேற்கொண்டால் ஆண்டவனின் அகம் மகிழும் என்று ஆய்ந்து ஓய்ந்து ஆலோசிப்பான். அவனுக்குப் பொருள் கிடையாது. அவன் பறையர் குலத்

துதித்தவன். அவனுக்கு ஒரு கைங்கரியமும் தோன்றவில்லை. என்ன செய்வான் பாவம்!

ஒரு நாள் இந்த விஷயத்தைப் பற்றி ஆழ்ந்து யோசனை செய்து கொண்டிருக்கும்போது திடீரென்று 'டங்கா, உடல், தவல் முதலிய கோயில் மேளவாத்தியங்களுக்குத் தோல் உதவுவது ஒரு திருப்பணியே யாகும்' என்று அவன் மனதில் தோன்றிற்று. இவ்வெண்ணம் திடீரென்று உண்டானது அவனுக்குத் தெய்விகமாக விளங்கியது. "பகவான் என்னுடன் பேசினார். மேளவாத்தியங்களுக்குத் தோலை வாலாயமாய்க் கொடுத்து வரும்படி எனக்கு ஆக்ஞாபித்தார்" என்று மிகவும் ஆனந்தத்துடன் உரக்கக்கூவினான். உள்ளம் மகிழ்ந்தான்; உடல் பூரித்தான். ஆனந்தத்தாண்டவ மாடினான். அப்பொழுதே அந்தத் திருப்பணியைச் செய்து வர நந்தன் ஆரம்பித்தான்.

உண்மையாகவே பகவான் எப்பொழுதும் நம்முடன் வார்த்தையாடி வருகின்றார். ஆனால், அவர் வார்த்தையை நாம் செவிகொடுத்துக் கேட்கின்றோமில்லை. நாம் அவருக்கு அர்ப்பணமிடும் நைவேத்தியங்களை, அவர் எல்லா வஸ்துக்களுக்கும் அதிகாரியாக விருந்த போதிலும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளுகிறார். நல்லதோலைச் சேகரிக்கும் கஷ்டமும், அதைப்பதனிடும் சிரமமும், அதை அளவு பிரகாரம் அறுக்கும் அவஸ்தையும் நந்தனுக்குச் சத் காலக்ஷேபங்களாயின.

அவைகள்தான் புண்ணித்தையும், மோக்ஷத்தையும் தரும் காரியங்கள் என்றும் அவன் எண்ணினன். தோலின் வாசனை ஒன்றே அவன் மனத்தில் அநேக தெய்விக எண்ணங்களை எழுப்பும் சக்தியைப் பெற்றிருந்தது.

## II

### திருப்புன்கூர் ஆச்சரியம்.

ஆதனூர் சேரியில் நந்தனுக்குச் சில நண்பர்கள் உண்டு. (அவர்களுடைய பெயர் நமக்குக் கர்ன பரம்பரையாக வழங்கிவராமற்போய் விட்டதைக்குறித்து விசனப்படுகின்றோம்) அச் சினேகிதர்கள் யாவரும் அவன் செய்யும் திருப்பணிக்கு உதவிபுரிந்தும் அவனுடைய ஊக்கத்தை விருத்திசெய்தும் வந்தார்கள். நந்தன் அடிக்கடி பகவானது கல்யாண குணங்களையும், கீர்த்தியையும், மகிமையையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவான். நெற்றியில் விபூதியைப் பூசிக் கொள்ளும்படி அவர்களுக்குக் கொடுப்பான். தானும் மெய்யில் நீறுபூசிப் பரமசிவனைப்போல் விளங்குவான்.

ஒருநாள் வயலில் உழைப்பதற்கு ஒன்றுமில்லாமல் ஒழிவாக விருந்ததால் நந்தன் தன் தோழர்களுடன் வேறொருவரிடமும் சொல்லாமல் அருகேயிருக்கும் திவ்வியக்ஷேத்திரம் என்று சொல்லக் கூடிய திருப்புன் கூருக்குச் சென்றான்.

ஒருவருடனும் சொல்லாமல் சென்றதற்கு முக்கியகாரணம் அவர்கள் யாவரும் அக்கிராமத்துப் பிராமணர்களிடம் அடிமைகளாக விருந்தமைதான். அந்தத் திருப்புன்கூருக்கு இப்போது பழைய வைத்தீஸ்வரன் கோயில் என்று பெயர் வழங்கி வருகின்றது.

அவ்வூரை அவனடைந்ததும் அதை மூன்று தரம் வலமாக வந்து அடிக்கடி மெய்யில் திருநீறணிந்து, சிவநாமங்களை உரத்துச் சொல்லிக்கொண்டே வந்தான். நந்தன் தன்மனத்தைப் பகவானிடம் செலுத்தி விட்டான். பக்திமேலீட்டினுல் ஆனந்தத்தாண்டவம் புரிந்தான்; ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான். சாயங்காலம் சூரியன் அஸ்தமித்ததும் ஆலயக்கதவுகள் திறக்கப்பட்ட போது நைவேத்தியத்திற்காகத் தான் கொண்டு வந்திருந்த தேங்காய்களையும், வாழைப்பழங்களையும், தோல்மூட்டைகளையும் குருக்களிடம் நந்தன் அனுப்பினுன். அவன் கோயிலுக்கு வெளியிலேயே துவஜஸ்தம்பத்திற்குச் (கொடிமரம்) சற்றுத்தூரமாகவே நின்ருன். அங்கிருந்தபடியே பகவானைத் தரிசித்தான். வெட்டி வீழ்த்திய பனைமரம்போல நிலத்தில் விழுந்து பன்முறை நமஸ்காரம் செய்தான். இதுகாறும் பகவானைத் தரிசிக்கப் பேரவாக் கொண்டிருந்தபடியால் நந்தனுடைய ஆனந்தம் சொல்லத்தரமல்ல. அவன் பகவானைத் தரிசித்தது அதுவே முதல்

தடவையானதால் பரமானந்த மடைந்தான். தொலேவிலிருந்தே சுவாமியைத் தரிசித்தபோதி லும், நெய்விளக்குகளின் பிரகாசத்தில் கடவுளின் தேஜஸ் பிரகாசிப்பதைக் காணப் பேரானந்தங் கொண்டான். மணிகளின் ஓசையும், பக்தசிகா மணிகளின் கூட்டமும், மந்திரங்களின் சப்த மும், தேவாரப்பதிகங்கள் பாடப் படுவதனுலுண் டாகும் இனிய கீதங்களும், தேவதா பூஜை யும், கற்பூர ஆரத்தியும், தூபதீப நைவேத் தியங்களும் இவைகளெல்லாவற்றையும் விட சிவாலிங்கம், அந்தப் பிரதேசத்தைப்பகவான் சன் னிதியாகவும், வேதங்கள் உறைவிடமாகவும் மாற் றியது. இவைகள் யாவும் நந்தன் மனதில் பதிந்திருந்த சித்திரத்தைப் பின்னும் விசாலப் படுத்தி உறுதியாக நிலேக்கச் செய்தன. அவன் இழிகுலத்தில் பிறந்திருந்தது அவனுக்கு அனு கூலமாயிற்று. 'கோயிற்பூனே தேவர்க்கஞ்சாது' என்பதைப்போல தினந்தோறும் பகவான் அருகே நின்று தரிசிக்கும் பிராமணர்கள் பக்தி யிற் குறைவு பட்டிருந்தார்கள். ஆனுல், நந்த னுடைய பக்தி அவர்களதைக் காட்டிலும் ஆயிர மடங்கு அதிகமாயிருந்தது. இளமையில் கொ ண்டிருந்த ஆச்சரியமும் வியப்பும் முற்றிலும் அவனே விட்டு நீங்கவில்லே.

நந்தன் கண்ட காட்சி மிகவும் நூதனமா யும், வியப்பைத் தரத்தக்கதாயு மிருந்ததால்

அதைக் கண் கொட்டாமல் பார்த்தான். விழிகளினின்றும் நீரைத் தாரை தாரையாகப் பெருக்கினன். பகவானிடத்தில் அவனுக்கிருந்த பிரேமையானது நிமிஷத்திற்கு நிமிஷம் விருத்தியாகிக் கொண்டேவந்தது. கடைசியில் ஒரே மனதாகப் பகவானைத் தியானம் செய்ய யோகத்திலமர்ந்துவிட்டான். அந்த ஆனந்தத்தில் மூழ்கியதும் எல்லா எண்ணங்களும் பறந்தோடிவிட்டன. அவனுடைய பக்தியின் விசேஷத்தைக் காண்போர் ஆச்சரியங் கொள்ளாமல் இருக்கவே மாட்டார்கள். அவன் இழிகுலத்தில் உதித்தவனயிருந்தாலும் அப்போது அவனுடைய முகமண்டலத்தில் பிரகாசித்த தேஜஸைத் தரிசித்தவர்கள் வியப்புக் கொள்ளாமலிருந்திரார். அந்தப் பக்தியோகத்தினின்றும் அவன் எழுந்திருக்கும் போது அவனைச் சுற்றி அநேகர் சூழ்ந்துகொண்டிருப்பதைக் கண்டான்.

நந்தன் திருப்புன்கூர் ஆலயத்திற்கு வந்த விஷயம் சரித்திரத்தில் என்றென்றைக்கும் அழியாமலிருப்பதற்கு ஓர் அரிய சம்பவம் நடந்தது. அந்தச்சம்பவம் அந்த ஆலயத்திற்கே ஒரு புகழைத்தந்தது. துவஜ ஸ்தம்பத்திற்கு வெளியே நின்று பகவானுடைய திவ்வியமங்கள ரூபத்தைத் தரிசிக்க நந்தன் கஷ்டப்பட்டான். ஏனென்றால், சிவாலிங்கத்திற்கு நேர் எதிரே நந்திப்படுத்துக் கொண்டிருந்தது. அதனல் பகவானது திவ்

விய மங்கள ரூபம் நந்தனுக்கு மறைக்கப்பட்டிருந்தது. ஆகவே, பரமசிவன் தன்பக்தன் மீது கருணைகொண்டு நந்தியை ஒருபக்கம் ஒதுங்கியிருக்கும்படி கட்டளையிட்டார். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு நந்தி ஒதுங்கிக்கொண்டது. இன்றைக்கும் அந்த நந்தி விக்கிரகமானது திருப்புன்கூரில் பகவான் சன்னிதானத்திற்கு நேர் எதிரே வைக்கப்படாமல் சற்று ஒரு பக்கம் ஒதுக்கமாக வைக்கப்பட்டிருக்கின்றது.

ஆ! என்ன ஆச்சரியம்! பகவான் தன் பக்தனுக்கு ஈடுபட்டு அவன் வேண்டுவனவற்றையும் விரும்புவனவற்றையும் உடனுக்குடனே அளிக்கின்றார். அவருடைய கருணைதான் என்னே! என்னே!

## III

### சிதம்பர க்ஷேத்திரத்தின் பெருமை.

நந்தன் யோகத்தினின்றும் விழித்தெழுந்து தம் எதிரே நின்றுகொண்டிருந்த அந்தணர் கூட்டத்திற்கு நமஸ்காரஞ் செய்தான். பிறகு தன் நண்பர்களுடன் மறுபடியும் அக்கிராமத்தை வலம்வர ஆரம்பித்தான். அப்படிப் பிரதக்ஷணமாக வரும்போது அக்கிரகாரத்தில் கோடி வீட்டின் தெருத்திண்ணையின்மீது ஓர் அந்தணர் உட்கார்ந்து எதிரே அமர்ந்திருந்த ஒரு பெரிய கூட்டத்தவர்க்குச் சிதம்பர புராணத்தைப்பற்றி

உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டிருநதார். நந்தன் அவ்வீதியை அணுகும்போது 'சிதம் பரந்தான் பூலோகத்தில் மோக்ஷங் கொடுக்கும் புண்ணிய பூமி. அந்தத் திவ்விய க்ஷேத்திரத்தி லுள்ள ஆலயத்தை எவன் தரிசிக்கின்ருனே அவன் சண்டாளனுக விருந்தாலும் பிறப்பு இறப்பு என்பவைகளை ஒழித்து, சமுசார சாகரத் தைக் கடந்துமோக்ஷக்கரை ஏறுகின்ருன்' என்று அந்தப் பிராமணர் சொல்லிக் கொண்டிருந்தார். இதைச் சொல்லி முடித்ததும் அந்த ஆலயத் தைப்பற்றி வருணிக்கத் தொடங்கினுர்.

ஐதிகரீதியில் சிதம்பரம் உலகத்திலுள்ள நக ரங்கள் எல்லாவற்றினையும் விட மிகவும் தன தானிய சம்பத்தைப் பெற்றிருந்தது. கிறிஸ் தவர்களுக்குப் பாலஸ்தீனம் எப்படியோ, முக மதியர்களுக்கு மெக்கா எப்படியோ, வைஷ்ண வர்களுக்கு ஸ்ரீரங்கம் எப்படியோ, அப்படிச் சைவர்களுக்குச் சிதம்பரம் என்ற க்ஷேத்திரம் புண்ணிய பூமி. இது தென்னிந்தியாவிலுள்ள ஐந்து க்ஷேத்திரங்களில் ஒன்று. அந்தப்பஞ்ச க்ஷேத்திரங்களில் ஒவ்வொன்றிலும் பரமசிவன் பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றின் அமிசத்தைப் பெற்றிருக்கின்ருர். சிதம்பரத்தில் அவர் பஞ்ச பூதங்களில் முதன்மையான ஆகாச அமிசத் தைப் பெற்றிருக்கின்ருர். பஞ்சபூதங்களைக் கடவு ளாகப் பாவித்து வழிபடுவது என்பது வேத சம்

மதமானது. இஃது என்றே பிரபஞ்சம் பஞ்ச பூதங்களாலானது என்பதைத் தெளிவாக விளக்குகின்றது. சிதம்பரத்திலிருக்கும் ஆகாசம் இரசாயன சாஸ்திரிகள் கூறும் அந்த ஆகாசமல்ல. அந்த ஆகாசமானது சர்வ வியாபகமாயும் ஆதியந்த மில்லாததாயுமுள்ள தனிப்பெரும் பொருளேயாம். சிதம்பரத்திலுள்ள ஆலயத்திற்குத் தான் கோயில் என்று சொல்லத் தகும். அக்கோயிலின் நடுவில் சித்சபை என்று சொல்லப் படும் தங்க ஓடுவேய்ந்த மண்டபம் இருக்கின்றது. இந்தக் கனக சபையில்தான் நடராஜ மூர்த்தியின் திவ்விய மங்கள விக்கிரகம் தேஜோமயமாக விளங்குகின்றது. மற்றைய விக்கிரகங்களைக் காட்டிலும் நடராஜ மூர்த்தியின் விக்கிரகம் தான் மிக அழகும், தேஜஸும் மூர்த்திகரமும் பெற்றது. மற்றக் கோயில்களிலுள்ள நடராஜ விக்கிரகங்களைக் காட்டிலும் சிதம்பரத்திலுள்ள நடராஜ விக்கிரகந்தான் மிகவும் மேன்மையும் தெய்விகமும் பொருந்தியது. சிற்பசாஸ்திரப் பிரகாரம் ஆலோசனை செய்தால் அவ்வளவு அழகும், தோஷமற்றதும், மூர்த்திகரம் பெற்றதுமான விக்கிரகம் அதைப்போல் கிடைப்பது அருமையினும் அருமை என்று நன்றாக விளங்கும்.

மிருதுவான சுருண்டமயிரும், நீண்டு சற்றே எடுப்பான நாசியும், கருணை சொரியும் கண்ணிணைகளும், தயையும், ஆனந்தமும் தாண்டவமா

டும் முகமண்டலமும், அழகாக மடிந்த கைகளும், அவைகளில் பிரகாசிக்கும் ஆபரணங்களும், காண்பவர்கள் உண்மையிலேயே விக்கிரகம் நர்த்தனஞ் செய்கிறது என்று சொல்லத்தகும் நடனமும், கடைசியில் மனதைக் கவரும் தூக்கிய பாதமும், நான் எழுதும்போது என் கண்முன்னே தோன்றுகின்றன. கொழுந்துவிட்டெரியும் அக்கினியினின்று கிளம்பும் நெருப்புப்பொறிகள் போலவும், ஊற்றினின்றுங் கசியும் நீர்த்துளிகளே போலவும், நடராஜமூர்த்தியின் வலது கரங்களிலொன்றிலுள்ள டமருகத்தின் சப்தத்தினின்றும் அகில உலகங்கள் உண்டாயின என்பதை அந்த டமருகம் நன்ருகக் குறிப்பிடுகின்றது. மற்றொரு வலதுகரத்தினுல் தமது பக்தகோடிகளுக்கு அபயம் அளிக்கின்ருர். நக்ஷத்திரங்கள், மலைகள், சமுத்திரங்கள் இவைகள் எல்லாம் நிலையற்றவை அற்பவாழ்வைப் பெற்றவை என்று குறிப்பிட்டுச் சம்மரிக்குஞ் சக்தியை இடது கரங்களிலொன்றிலுள்ள அக்கினிஜ்வாலையானது சூசிப்பிக்கின்றது. இரகசியம்—ஒருவருக்கும் புலப்படா இரகசியம்—ஒன்று இருக்கின்றது என்று அவருடைய ஊன்றியுள்ள வலதுகால் வெளியிடுகின்றது. கடைசியில், குஞ்சிதபாதமானது (தூக்கியபாதம்) பகவானின் காருண்யத்தைக் குறிக்கின்றது. அந்தப்பாதத்தைச் சரணமாக எவர்கள் அடைகின்ருர்களோ அவர்களை அபயந்தந்து காப்பாற்று

கிறது அப்பாதம். அது அவர்களைச் சமுசார பந்தத்தினின்றும் பிறப்பு இறப்பு முதலிய கருமங்களினின்றும் காப்பாற்றுகின்றது.

அப்பர், மாணிக்கர், பட்டினத்தார், தாயுமானவர் இவர்களெல்லாம் அவருடைய சன்னிதானத்தில் சதாரணமாகப்பேசும் தமிழைமறந்து அழகும் சிறப்பும் தத்துவமும் இனிமையும் ஒருங்கமைந்த செய்யுள் நடையில் தோத்திரங்கள் செய்தது ஓர் ஆச்சரிய மல்ல. தெற்கிலுள்ள சிவனடியார்களுக்குப் பிரபஞ்ச நாடக சூத்திரதாரியான நடராஜமூர்த்தியின் ஆனந்தத் தாண்டவம் என்றால் கொண்டாட்டம். அவர்களுக்கு எங்கு அணுக்கள் அசைகின்றனவோ அங்கு நடராஜன் நடனம் புரிகின்றார் என்ற கொள்கை உண்டு. குழந்தைகளின் விளையாட்டிலும், ஸ்திரீகளின் புன்சிரிப்பிலும் இராஜாக்களின் யுத்தத்திலும், நக்ஷத்திரங்களின் சலனத்திலும், பூகம்பங்களிலும் அக்கினியிலும், பிரளயத்திலும், நீர்த்துளிகளிலும் நடராஜன் நடனம் புரிகின்றார், என்றென்றும் ஆனந்தத்தாண்டவம் செய்கின்றார் என்ற முழு நம்பிக்கை அச்சிவனடியார்களுக்கு இருந்து வந்தது.

வேதாந்திகளுக்கு நடராஜமூர்த்தி சர்வவியாபியான பரமாத்மாவாகவும், அவருடைய நடனம் காமக்குரோத லோப மத மாற்சல்லியம் என்றவைகளை ஜெயித்த ஆன்மா எந்த நிலைமையி

விருக்குமோ அந்த நிலையைக் குறிக்கும் என்ற கொள்கை இருந்தது. இந்தத் தத்துவ விஷயங்களை அறிந்துதான் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் உபநிஷத்து உபதேசத்தைப் போன்ற பல அரிய கவிகள் இயற்றியிருக்கின்றூர்.

சிதம்பர மகாத்மியத்தில் இன்னொரு அரிய விஷயம் காணக்கிடைக்கின்றது. பதஞ்சலியும், வியாக்கிரபாதரும் நடராஜமூர்த்தியின் சன்னிதானத்தையடைந்தார்கள். பதஞ்சலி என்பவர் முனிவர். அவர் சமஸ்கிருதத்தில் இலக்கணம் இயற்றிய நிபுணர். அவர் யோகத்தின் விசேஷத்தால் நடராஜமூர்த்தியை அடைந்தார். வியாக்கிரபாதரும் பெரிய மகான். அவர் பெருமானிடத்தில் கொண்ட பக்தி விசேஷத்தால் நடராஜரை அடைந்தார். யோகம், பக்தி இவ்விரண்டும் ஒரு முடிவையே கடைசியில் கொடுக்கின்றன என்பது இவ் விஷயத்தால் விளங்குகின்றது. உலகத்திலுள்ள எல்லாமதங்களும், கொள்கைகளும், அனுதியாய், எங்கும் நிறைந்தவராய் விளங்கும் பரம்பொருளை அடைய வெவ்வேருன மார்க்கங்கள்என்று ஒரேவார்த்தையில் சுருக்கமாகச்சொல்லலாம். அந்தக்கோயிலின் மதிலுக்குள்ளேயே, நடராஜரது சன்னிதிக்கு அருகிலேயே—ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாளது சன்னிதியிருக்கின்றது. இதனுல் வைஷ்ணவர்களுக்கும் சிதம்பரம் திவ்விய க்ஷேத்திரமாயிருக்கிறது.

சிதம்பரத்தின் மகிமையைச் சாதுரிய மொழிகளாலும், வருணனைகளாலும் அலங்கரித்து அந்த அந்தணர் சொல்வதை நந்தன் அதிக கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தான். சிதம்பரம், நடராஜமூர்த்தி, இவ்விரண்டு பதங்கள் அவனுக்கு அதிக இன்பத்தைக் கொடுத்தன. அன்றைய இரவே அவ்விடத்திற்கு அருகாமையிலிருந்த சிதம்பரத்திற்குச் சென்று தரிசிக்க வேண்டுமென்று அவன் பெரிதும் விரும்பினான். அந்தோ! மனிதன் தானென்று நினைக்க அது பல விடையூறுகளால் வேறென்றாகிறது. நந்தனைக்காணாத அவனுடையநண்பர் பலவிடங்களிலுஞ் சென்று தேடிக் கடைசியில் அவனைக் கண்டுவிட்டார்கள். இப்பொழுது அவன் விருப்பம் ஈடேறாமல், அவனுடைய நண்பர்களால் தடுக்கப்பட்டது. அவன்தோழர்களில் ஒருவன் 'நீ சிதம்பரம் போய்ச் சேருவதற்குள் கோவில் கதவு மூடப்பட்டுவிடும். போயும் பிரயோஜனமில்லை' என்றான். மற்றொருவன், 'அடே நந்தா, நீ இதற்குள்ளாக நாம் ஒருவருக்கு அடிமையாயிருக்கிறோ மென்பதை அடியோடு மறந்துவிட்டாயே. நாம் ஊரை விட்டு வந்து வெகு நேரமாய்விட்டது. இனி ஒரு நிமிஷமும் தாமதிக்கக்கூடாது' என்றுரைத்தான். அப்பொழுது நந்தன் ஒரு புத்தியில்லாத மூடனாக விருந்திருப்பானானால், 'அடே கடவுளைவிட அந்தப்

பிராமணன் உயர்ந்தவனு? நான் அவனை இலட்சியமும் செய்யமாட்டேன். நான் என் இஷ்டப்படி செய்கிறேன்' என்று கூறியிருப்பான். ஆனல் நந்தன் அவ்விதம் சொன்னவனல்ல.

அவன் தன் கடமையை எந்தச் சமயத்திலும் செய்யத்தவறினவனல்ல. யஜமான விசுவாசமும் தான் அடங்குந் தன்மையும் ஒருங்கே அமையப்பெற்றவன். இத்தகைய அருமையான குணங்களைப் பெற்றிருந்ததனுலேயே மிகப் பெரிய பதவிக்கும் நந்தன் ஏற்றவனுனன்.

## IV

### நந்தன் மனப்போக்கை மாற்ற முயலுதல்

நந்தன், தன்னூர் வந்துசேர்ந்தநாள் முதற்கொண்டு நடராஜரைத் தரிசிக்கவேண்டுமென்ற ஆவல் பெரிதுங் கொண்டான். இரவும் பகலும் நடராஜ மூர்த்தியை எண்ணியெண்ணிப் பாடுவான்.

"திருத்த பொன்னம்பலத்தே திருநடனஞ் செய்தருளுந்
திருவடிகளடிச் சிறியேன் சென்னிமிசை வருமோ
உருத்தகு நானிலத்திடைநீண மலத்தடை போய்ஞான
உருப் படிவமசை வேனே வொன்றி ரண்டென்னுத
பொருத்த முறு சுத்த சிவானந்த வெள்ளத்ததும் பிப்
பொங்கிய கம்புறங் காணு தெங்கு நிறைந் திடுமோ
அருத்தகு மவ்வெள்ளத்தே நான் மூழ்கி நான்போ
யதுவாகப் பெறுவேனே வறிந்திலேன் மேல்விளைவே"

என்று மிக உருக்கமாகப் பாடினன்.

நிலத்தில் உழுது கொண்டிருக்கும்போதும், வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கும் சமயத்திலும், இரவில் உறக்கங் கொண்டிருக்கும் காலத்தும் எப்பொழுதும் அவனுடைய மனம், சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரம் என்ற மூத்தொழிலையும் ஏற்று ஆனந்தக்கூத்தாடும் எம்பெருமானிடம் குடிகொண்டிருந்தது. அவன் ஒவ்வொரு நாளும் தன் யஜமானனிடம் தில்லைக்குப்போக உத்தரவு பெறவேண்டும் என்று உத்தேசங் கொள்வான். ஆனல், அவனே உத்தரவு கேட்டபாடில்லை. அநேக நாட்கள் சென்றன. சிதம்பரம் செல்லச் செலவுபெற யஜமானனைக்கேட்டு அவர்கொடுக்க மறுத்துவிட்டால் என்னசெய்வது என்று பயப்பட்டுக்கொண்டே வாளாவிருந்து விடுவான். தினந்தோறும் தன் நேசர்களிடத்தில் 'நான் நாளை சிதம்பரம் போகின்றேன்' 'நாளை சிதம்பரம் போகின்றேன்' என்று சொல்லி வருவான்.

எத்தனையோ நாட்கள்வந்து கழிந்தன. அப்பொழுதும் அவன் சிதம்பரம் சென்றவனல்ல. இவ்விதம் 'நாளை நாளை' யென்று ஏமாந்தான். அவன் 'நாளை போவேன்' 'நாளை போவேன்' என்று சொல்லிவந்ததனல் அவனுடைய அன்பர்களெல்லாம் அவனைத் 'திருநாளைப் போவார்' என்று பரிகாசமாய் அழைப்பதுண்டு.

இது நிற்க, ஆதனூர்புலேயர்கள் யாவரும் நந்தனது திருவிளேயாடல்களே முதலில் வேடிக்கைபார்த்தமாய் மதித்தார்கள். அவர்கள் நந்தன் நாளுக்குநாள் நடையுடை பாவனேகளில் மாறுபட்டு வருவதைக் கண்டு பெரிதும் பயந்தார்கள். அப்புலேயர்களுக்குப் பக்தி இன்னவித மிருக்கும் என்பதுகூடத் தெரியாது. நந்தன் அடிக்கடி சிவநாமங்களே ஸ்மரிப்பதும் அடிக்கடி திருநீற்றைத் தேகத்தில் பூசுவதும் இடைவிட்டு யோகத்தமர்வதும், இச்செய்கைகள் அவனது உறவினர்களுக்கு அச்சத்தைக் கொடுத்தன. அவனுடைய சாந்த குணமும், விநயமும், பகவானேப்பற்றி எச்சமயத்திலும் பேசுவதும், அவரது குணத்தையும் மகிமையையும் சொல்வதும், வேலேமீது கொஞ்சமும் கவனமில்லா திருப்பதும் அப்புலேயர்களுக்கு அதிகக்கவலேயையும் ஏக்கத்தையும் உண்டாக்கிவிட்டன. புலேயர்களின் இழிதொழில்கள் ஒன்றிலும் அவன் சேரமாட்டான். மாமிசத்தையும் மதுவையும் அவன் அடியோடு வெறுத்தான். ஆடு முதலிய ஜீவப்பிராணிகள் கொலே செய்யப்படுவதினின்றும் தன்னுல் கூடிய வரையில் தடுத்து வந்தான். சமயம் வாய்த்தபோதெல்லாம் கொலேயை மறுத்துக் கண்டித்து வந்தான். அவனுடைய குலத்தவர்கள் வீண் வம்பு பேசிக்காலங் கழிக்கும்போது, தான் ஒரு மரத்தடியிலமர்ந்து கடவுள் சிந்தனேயில் ஆழ்ந்திருப்

பான். தன்னைச் சுற்றிலுமுள்ள அதியற்புத சிருஷ்டிகளைக் கண்டு பிரபஞ்சத்திலுள்ள செடி, மரம், மலை முதலிய விநோதங்களைப் புகழ்வான். 'ஆ! இவைகள் யாவும் நடராஜருடைய ஊன்றிய பாதத்தின் மகிமைகள். என் ஈசனே! தங்களிடம் வரும் பாக்கியத்தை எனக்குத் தந்து, தங்களது நிஜஸ்வரூபத்தையுங் காணும்படியாகக் கிருபை செய்யப் பிரார்த்திக்கின்றேன்' என்று கடவுளை இறைஞ்சுவான். பிறகு அவன் கனக சபேசனது குஞ்சிதபாதத்தை ஸ்மரிப்பான். கண்களில் நீர் ததும்ப அந்தப் பாதத்தின் கீழ் சரணமடைய வேண்டுமென்றும் விரும்புவான்.

ஒரு நாள் நந்தன் வெகுநேரம் பகவத்தியானத்தி லமர்ந்திருந்ததனால், விழிகளிலிருந்து ஆனந்த நீர்சொரிய, தாண்டவம் புரிந்து கொண்டிருந்தான். அப்பொழுது அந்தப்பக்கமாக ஒரு புலையன் வந்தான். நந்தன் தேகந்தெரியாமல் கூத்தாடுவதையும், மெய்வியர்ப்பதையும் கண்டு ஏதோ கெட்டக் கிரகம் அவனைப் பிடித்திருக்கிறதென்று சேரியி லிருந்தவர்களிடம் அவன் சொன்னான். இச்சமாசாரத்தை அவர்கள் நம்பி விட்டார்கள். உடனே அவர்கள் பக்த சிரேஷ்டனைப் பிடித்துக் குலுக்கியும், ஆட்டியும், இம்சைகள் செய்து என்ன விசேஷம் என்று கேட்கத் தலைப்பட்டார்கள். அவர்களுடைய தொந்தரவைப் பொறுக்கமாட்டாமல் "கடவுள் ஒருவர்

இருக்கின்றார்' என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும் எவனாவது அவரை நமஸ்கரியாமலிருப்பானா?'' என்றான். இதன் பொருள் அவர்களுக்கு விளங்கவில்லை. அப்பொழுதே, சில கிழவர்கள் ஒன்று கூடி நந்தன் தன் குலதெய்வத்திற்குச் செய்யவேண்டிய பூஜைகளைச் சரிவரச் செய்யாத குற்றத்தினால் இம்மாதிரி பித்தன்போல் பிதற்றுகின்றான் என்றும் அடுத்த நாளே பூஜை செய்விக்கவேண்டியது அவசியம் என்றும் தீர்மானித்தார்கள்.

பூஜை போடுவதற்குத் தடபுடலாகக் காரியங்கள் செய்யப்பட்டன. மிகப் பெரிய பந்தல் ஒன்றும் போடப்பட்டது. அதன் கால்களில் அநேக வாழை மரங்களும், தேங்காய்க்குலைகளும், பனங்காய்க் குலைகளும் கட்டப்பட்டிருந்தன. மாவிலைத் தோரணங்கள் நெடுகத் தொங்கின. கொடிகள் பல காற்றிலசைந்து கொண்டிருந்தன. பலியிடுவதற்காகக் கோழிகளும் ஆடுகளும் அநேகம் ஓரிடத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

குறி சொல்வதில் தேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு வள்ளுவப் பூசாரி பூசை செய்ய ஏற்படுத்தப்பட்டான். அவன் களிமண்ணினால் வீரன், இருளன் முதலிய அநேக சில்லரைத் தேவதைகளின் உருவங்களைச் செய்தான். அதற்கு அடுத்தநாள் சேரியிலுள்ளவர்கள் யாவரும் பந்தலின் கீழ் கூடி இருந்தார்கள். களிமண்

பொம்மைகளெல்லாம் வரிசையாக வைக்கப்பட்டன. கோழிகளும், ஆடுகளும், கட்குடங்களும் எதிரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அக்கூட்டத்தினடுவில் நந்தனைச் சிலர் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். வள்ளுவன் தன் கையிலுள்ள உடுக்கையைத் தட்ட வாரம்பித்தான். உடனே தாரைகளும், தப்பட்டைகளும் அடிக்கப்பட்டன. குழல்களும் ஊதப்பட்டன. சில நிமஷங்கள்வரை இக்கர்ன கடூரமான வாத்தியங்கள் ஒலித்தன. அதன் பின்பு அவைகள் அடங்கிவிட்டன. பூசாரிக்கு ஆவேசம் வந்துவிட்டது. தன்மீது தெய்வம் வந்துவிட்டதென்று குதித்து ஆர்ப்பாட்டம் செய்யலானன். மற்றப்பேர்கள் அவனைப் பலங்கொண்டு பிடித்து அமுக்கிக் கொண்டார்கள். அப்படியும் அவன் உடுக்கையைத் தட்டிக்கொண்டும், கையினல் ஜாடைகள் செய்து கொண்டும், 'நந்தன், நந்தன்-நந்தனை நம்முடைய கடைத்தெருவிலுள்ள புளியமரத்திலிருக்கும் பெரிய பிசாசு பிடித்துக் கொண்டிருக்கிறது. அது அவனை இடியிடியென்று சிரிக்கச் செய்யும்; ஓவென்று அழச் செய்யும்; பேசச் செய்யும்; தூங்கச் செய்யும். இம்மாதிரியெல்லாம் நந்தன் செய்துவருகின்றனல்லவா'' என்று அப்பூசாரி கேட்க, எல்லோரும் ஒரே கூச்சலாய் 'ஆம், ஆம் உண்மைதான், உண்மைதான். எவ்வளவு சரியாய் தெய்வம் சொல்லிற்று

பார்த்தாயா' என்று ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் நந்தன் ஒன்றும் சொல்லாமல் தன் மனதிற்குள்ளேயே "ஹே! பிரபோ, மகாப்பிரபோ, உமது முடிவற்ற நடனத்தின் நேர்மைதான் என்னே! என்னே! உமது முடிவற்ற நடனத்தில் இதோ இவர்களுடைய கூத்தும் ஆச்சரியமாக விருக்கின்றது" என்று சொல்லிக்கொண்டான்.

பின்னும் அப்பூசாரி "நூறு ஆடுகளைப்பலியிடுங்கள். இருநூறுகோழிகளைக் கழுத்தை முறித்து அர்ப்பணஞ் செய்யுங்கள். குடங் குடமாக கருப்பண்ணனுக்கும் அவன் உடன் பிறந்தவர்களுக்கும் கள்ளை நைவேத்தியஞ் செய்யுங்கள். அப்பொழுது தான் நந்தனுடைய பித்தம் தெளியும்" என்றுசொன்னான். அவன் கொண்ட ஆவேசமும் அடங்கியது. உடனேநடுத்தர வயதுள்ள புலையர்களனைவரும் கூட்டமாகக் கூடி ஆட்டம் ஆடியும், பாட்டுப் பாடியும் காலங்கழித்தனர்.

இவர்களது ஆட்டத்தையும், பாட்டையும் கவனித்த நந்தன் சிவபிரானிடத்தில் பக்தியாக விருக்கும்படி அவர்களுக்கு எவ்வளவோ எடுத்துக் கூறினான். அந்த வெறிபிடித்த கூத்தாடிகள் அவன் சொன்னதைச் செவிகொடுத்துக் கேட்டார்களில்லை. நந்தனது உபதேசமெல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதினது போலாயிற்று. நந்தன் சொல்வது தான் என்னவென்றும் அவர்கள் கவனிக்கவில்லை. அக்கூத்து ஆடி

நின்றதும் அதை விடக் கேடான செய்கை தொடர்ந்தது.

ஒரு பாவமு மறியாத சாதுவான ஆடுகளை யும், கோழிகளையும் கொன்ருர்கள். அக்கொலை யைக் காணச் சகியாது நந்தன் எழுந்திருந்து கொலை செய்வதை மறுத்தான். ஆனல் பயனற் றுப் போய்விட்டது. சிருஷ்டி கர்த்தனது மகி மையையும் அருளையும்பற்றி வெகுவாகச் சொல்லி, அவர்கள் வழிபடும் கெட்ட கொரேமான தெய் வங்களைவிட்டுத் தன்னுடன் நடராஜ எம்பிரானைச் சேவிக்க வரும்படி வேண்டிக்கொண்டான். அவ னது உபதேசமொழிகள் யாவும் கானகத்தில் காய்ந்த நிலவைப்போலும்; கோழியி னெதிரில் வீசிய நன்முத்துக்கள் போலவும் பயனற்றுப் போயின.

நந்தன் இவ்விதம் பேசுவதைக் கண்டு பின் னும் அப்பஞ்சமர்கள், பூசாரி கூறிய மொழிகளை முற்றிலும் நம்பினுர்கள். அறிவின்மை என் னும் அந்தகாரத்தில் மூழ்கிக்கிடக்கும் தன் உற வினர்களைக்கண்டு துக்கங்கொண்டு எவ்விதத்தி லாவது அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு கட வுளைப் பிரார்த்தித்தான்.

கனகசபேசனைத் தியானஞ் செய்யச் செய்ய சிதம்பரம் சென்று அவரைத் தரிசிக்கவேண்டும் என்ற எண்ணம் நந்தனுக்கு உறுதிப் பட்டு வந் தது. அந்த எண்ணம், தில்லைக்குச் செல்ல வேதி

யனே விடை கேட்கும்படி அவ்வளவு பலத்தை அவனுக்கு அளித்தது. அளித்தும் கூட அவன் சற்று நேரம் தயங்கியபிறகு தன் தலைவனிடஞ் சென்ருன்.

இதற்குள்ளாகப் பிடாரியின் பக்தர்கள் யாவரும் ஒரு கூட்டமாய்த் தங்கள் தெய்வம் நந்தன் விஷயத்தில் தோற்றுப் போய்விட்டதனுலே அவைகளைக் காட்டிலும் பெரிய தெய்வமான வேதியனிடத்தில் அவன் செய்து வருவதைப் பற்றி முறையிடச் சென்ருர்கள். வேதியனும் அவர்களது வாய்மொழியைக்கேட்டு 'நந்தன் விஷயத்தில் தகுந்ததைச் செய்வோம்' என்று சொல்லி அவர்களை யனுப்பிவிட்டான்.

## V

### தில்லைக்குச்செல்ல விடைபெறுதல்

புலையர் கூட்டம் மறையவனிடத்திருந்து மறைந்த பின்னர் நந்தன் தன் யஜமானனுன வேதியனிடம் செல்ல லானுன். அவனே வணங்கி நந்தன் "இப்பொழுதாவது சிதம்பரஞ் செல்ல விடையருள வேண்டும்" என்ருன். இம்மொழியைக் கேட்டதும் அவ்வந்தணப் பிரபு சினங்கொண்டு 'அடே நந்தா! உனக்கு இந்தமதி தந்த தாரடா, புலையனுன உனக்குச் சிதம்பர தரிசனம் ஒரு கேடா. ஏ! மடையா, கள்ளப்பயலே, நான்கு வேதங்களைஉணர்ந்தவர்கட்கும்காணக்கிடைக்காத

தரிசனம் உனக்குக் கிட்டுமோ? இதனுல் பார்ப்பானுகிவிடலாம் என்று எண்ணுகின்ருயா?' உனக்கு மிகவும் கொழுப்புப் பிடித்திருக்கிறது. சாட்டைகொண்டு உன்னை நன்ருகப்புடைக்கவேண்டும். நீ சிதம்பரமா போகவேண்டும்?' என்று உருமினுன்.

இம்மறு மொழியைக் கேட்டதும் பேதை நந்தன் கோடை இடிகேட்ட நாகம் போலானுன். மேல் கொண்டு ஒரு வார்த்தையுஞ் சொல்லாமல் திரும்பிவிட்டான். தன் மனத்திற்குகந்த மரத்தடியிலமர்ந்து கண்களில் நீர் வாரப் புலம்பி 'ஆ! கடவுளே, உன் நெஞ்சம் தான்கல்லோ, இரும்போ, மற்று யாதோ அறிகிலேன். என் தலைவனும் வேதியரை நிந்திப்பதில் ஒருபயனுமில்லை. அவரும் உன்னுடைய ஆக்கினைப் பிரகாரம் நடக்கின்ருர். அகில உலகத்திலுள்ள அணுவும் உனது கட்டளையின்றி அசைவதில்லை என்று அறிஞர் கூறுகின்ருர்களே! அடியேன் ஒரு கேவலமான பறையன். உனது கருணைக்குப் பாத்திரமற்றவன். ஆ! என்ன கடினசித்தம் உனக்கு என் விஷயத்தில். பேதையான அடியேன் மீது உனக்குச் கொஞ்சமும் கிருபையில்லையா? கெருவப்படும்படி என்ன வாழ்வு எனக்கு இருக்கின்றது? எனக்குச் செல்வமுமில்லை; அழகையும் பெற்றவனல்லன்; கல்வியறிவில்லாத பெரு மூடன் நான்; எவ்விஷயத்திலும் கீர்த்தியும், புகழும் பெற்றவனல்லேன். இவைகள் தானேவெனில்

பறைக்குலத் துதித்து, பிறந்த நாள் முதல் அடிமையாகவு மிருக்கின்றேன். என் இதயத் தில் உறையும் நடராஜா! உனது கருணை எனக்குக்கிடைக்கும் என்று எண்ணி நான் நம்பி யிருந்தவரையில் இவைகளைப் பொருட் படுத்தின வனல்ல. இப்பொழுதோ, அவ்வெண்ணத்தை யும் என்னிடத்திலிருந்து அபகரித்துக் கொண் டாய். நான் எவ்விதம் தான் உயிர் வாழ்வது? எளியவனுன என்மீது உனக்குச் சிறிதும் கருணை யில்லாததனுல் நான் என்னுயிரை உனது திவ் விய நாமங்களை உச்சரித்துக் கொண்டே விடுகின் றேன்' என்று தீர்மானித்துத் தற்கொலை புரிந்து கொள்ளவும் நினைத்தான். இவ்வளவு அவன் கூறிய போதிலும் கனகசபேசனிடத்தில் எள்ளள வும் நம்பிக்கை இழந்தவனல்ல. சிறிது பொழுது பொறுத்து 'எனக்கு எது நன்மை யென்பதை பகவான் நன்ருக அறிவார். அவருடைய விருப் பத்திற்கு இணங்க நன்மையே செய்யினும், அல் லது தீமையே செய்யினும் நான் ஏற்றுக்கொள் கிறேன்!'' என்று தனக்குள் சிந்திக்கலானுன்.

சின்னுட் கழித்து நந்தன் இரண்டாவது முறை தில்லைக்குச் செல்ல வேதியரை அநுமதி கேட்கலானுன். இம்முறையும் நந்தன் மறை யவனிடமிருந்து விடை பெற்ருனில்லை. செலவு பெறுவதற்குப் பதிலாக நந்தன் நிந்தைகளைப் பெற்ருன். இச்சமயம் அவன் அதிகமாக வருத்

தப்படவில்லை. ஏனென்றால் பகவானது தரிசனத்தைப் பெறத்தகுந்த பக்தி தன்னிடமில்லை என்பதை யுணர்ந்தான். ஆகவே, முன்னைக்காட்டிலும் அதிக பக்தியும், விநயமும் கொண்டு வழிபடலானான். சிற்சில வேளைகளில், யோகத்தமர்வதும், சிற்சில வேளைகளில் கண்விழித்திருந்த ஒவ்வொரு நொடியும் கனகசபேசனை மறவாது தியானித்தும் வந்தான். உறக்கங்கொள்ளும் நேரத்தைக் குறைத்துக் கொண்டான். காலை வேளையிலும், மாலைப்போழ்திலும், பரமானந்தத்தினால் தாண்டவம் புரிந்தான். பெருமானது கிருபா நோக்கம் தனக்குக் கிடைக்காமற் போனதைக் குறித்துப் புலம்பினான்.

கனகசபேசா! யாருக்கு என்ன தீங்கிழைத்தேன்? என் மனம் அறிந்தவரையில் ஒருவருக்கும் நான் பொல்லாங்கு நினைத்தவனல்ல. தங்களுக்கு ஒருவித அபசாரமும் செய்தவனல்லவே.

"யாரினுங் கடையேன் யாரினுஞ் சிறியே
னென் பிழை பொறுப்பவர் யாரே
பாரினும் பெரிதாம் பொறுமையோய் நீயே
பாவியேன் பிழை பொறுத்திலையேல்,
ஊரினும் புகுத வொண்ணுமோ பாவியுடம்பை
வைத்துலாவவும் படுமோ
சேரினு மெனைத்தான் சேர்த்திடார் பொதுவாந்
தெய்வத்துக்கடாதவனென்றே"

என்று நந்தன் வருந்தினான்.

ஓடையிலும், பட்சியிலும், மனிதனிலும், மரத்திலும், சுருங்கக் கூறின், எந்தெந்த விடத்தில் நந்தன் உயிரைக் காண்கின்றனனே அந்தந்த விடத்தில் எல்லாம் நடராஜரின் சன்னிதானம் இருப்பதாக உணர்ந்தான். இவ் வியப்பைத் தரும் உணர்வினுல் அடிக்கடி ஓடையுடன் விளையாடியும், மரத்தை ஆலிங்கனம் செய்தும், பட்சியின் பின் ஓடியும், இன்னும் இத்திறப்பட்ட ஆச்சரியச் செய்கைகளைப் புரிந்தும் வந்தான். இக்காரியங்கள் நந்தனது உறவினர்கள் கொண்ட கொள்கையை உறுதிப்படுத்தின. மூடர்களான அவர்கள் என்னென்னவோ பரிகாரங்களைத் தேடினுர்கள். அவனது பித்தத்தைத் தெளிவிக்க நந்தனைக் கயிற்றினுல் இறுகக்கட்டியும், எவ்வளவோ சித்திரவதைகள் செய்தும் பார்த்தார்கள். ஒன்றிலும் பலன் ஏற்படவில்லை. தனக்கு இம்சைகள் செய்யப்படும் காலத்திலுங்கூட, அவர்களை நிந்திக்கத் தன் கவனத்தைத் தன் இருதயத்தில் வாழும் நடராஜ மூர்த்தியினின்றும் திருப்பவில்லை. அவர்கள் இழைத்த இம்சைகள் பொறுக்க முடியாமலிருக்குமானுல் 'பிரபோ! தப்பிதம் இவர்களிடத்திலில்லை. தங்களது அநுமதியின்றி இவர்கள் இவ்விதம் செய்யமாட்டார்கள். பேதையான இவர்களை மன்னிக்கவேண்டும்' என்பான்.

அவனுக்கு இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொன்றும் தெய்விகமாகத் தோன்றிற்று. உயிருள்ள

பிராணிகளிடத்தில் அவனுக் குண்டாயிருந்த அன்பும், கருணையும் சொல்லத்தரமன்று. தரை மீது ஊர்ந்து செல்லும் எறும்புகளுக்குச் சர்க்கரையைக் கொடுத்துக் காப்பாற்றுவான். சாலையிலுள்ள பூச்சிப் புழுக்களை எடுத்து அப்புறத்தே விடுவான். சூரியனது வெப்பத்தினின்றும், நடந்துசெல்லும் மானிடர்களின் காலில் மிதிபட்டுப் போவதினின்றும் அவைகளைக் காப்பாற்றி வருவான். சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடியும், பறவைகளின் இனிய கீதங்களைத் தன் காதாரக் கேட்டும் களிப்பெய்துவான்.

இது நிற்க, அறுவடைக்காலம் நெருங்கியது. அவனது இனத்தவர்கள் அவனுடன் கஷ்டப்பட்டதால் வயல் வேலைகளெல்லாம் தாமதப்பட்டன. வேதியன் சீற்றங்கொண்டு தன் பண்ணையாட்களை விரைவினில் அழைத்தான். நந்தன் தவிர மற்றர்கள் யாவரும் சென்று அந்தணனிடம் தாமதப்பட்டதன் காரணத்தையும் அவன் புத்திமாருட்டத்தையும் பற்றி விவரமாகச் சொல்லினர். இதைக்கேட்ட அப்பிராமணன் வெகுவாகச் சினந்து அவர்களை அனுப்பிவிட்டான். நந்தனை உடனே தன்னிடம் வரும்படிக் கட்டளையுமிட்டான். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு நந்தன் வேதியனுக்குத் தீர்க்கமாகத் தெண்டனிட்டு, அவனெதிரில் கைகளைக்கட்டி வாய் பொத்தி நின்ருன். அம்மறையவன் அவன் வத

னத்தில் பிரகாசிக்கும் தேஜஸையும், சாந்தத்தை யும், சந்தோஷக்குறியையும் நோக்கி மிகவும் வியப்படைந்தான். மற்ற அடிமைகளைப்போல் நந்தன் சாதாரணமானவனல்ல வென்றும், அவனைப்பற்றிக்குறைகூறிப்புலையர்கள் சொல்வது சுத்தப்பொய் யென்றும், நந்தன் பக்தி விசேஷத்தினால் செய்த செய்கைகளை அவர்கள் பித்தம் என்றுரைத்தார்கள் என்பதையும் உள்ளங்கை நெல்லிக் கனி யெனத்தெளிந்தான்.

'சிதம்பரம் போகச்செலவு தரவேண்டும்ஐயா!' என்று நந்தன் கேட்டபொழுது அவ்வந்தணனுக்கு எரியும் தீயில் நெய் ஊற்றியது போலாயிற்று. பரிதாபத்துடனும், ஊக்கத்துடனும் விடைதரவேண்டுமென்று நந்தன் கேட்டமாதிரியானது கல்நெஞ்சம் படைத்த பிரபுவின் இருதயத்தை உலையின் மெழுகைப்போல் இளகச் செய்தது. ஒரு பிழையும் செய்தறியாதவன் மரண தண்டனையைப் பெறும் குற்றஞ் சாட்டப்பட, நியாயாதிபதி வாயினின்றும் வருப்மொழிகளை எவ்வளவு மனத்தாங்கலோடு எதிர்பார்ப்பானோ அவ்விதம் நந்தன் பிரபுவின் வாய்மொழிகளை மழையில்லாப் பயிர் மழையை எதிர்பார்ப்பதே போலவும் எதிர்பார்த்தான்.

வேதியனும் வாயைத்திறந்து மொழிவானாயினன். 'நந்தா! நீ உண்மையில் நல்லவன். ஆனால், என்னமோ கெட்டவழியில் சென்றுவிட்

டாய். சில நாட்களாக நீ உன் வேலைகளைச் சரி வரச் செய்வதில்லை. இப்போது அறுவடைக் காலம் அணுகிவிட்டது. விளைச்சல் யாவும் அறுக்கப்படவேண்டும். நிலங்கள் யாவும் அறுவடையான பின்பு நீ சிதம்பரம் செல்ல விடை தருகின்றேன்' என்று சாந்தமாய்ப் பகர்ந்தான்.

இச் சொற்கள் வேதியன் வாயினின்றும் வெளிவந்தனவோ இல்லையோ நந்தன் ஆட்டம் ஆடிக்கொண்டு மான்போல் துள்ளி ஒரே பாய்ச்சலாக வயல்களுக்குச் சென்றான். நந்தன் அப்போதடைந்த ஆனந்தத்திற்கு அளவே கிடையாது. கொஞ்சநேரங் கழித்து நந்தன் மீளவும் தனவந்தனது வீட்டுப் புறங்கடையில் சென்று அவனைக் கூப்பிட்டான். அப்பிரபு 'எதற்காக என்னைக் கூப்பிட்டாய். யாது விசேஷம்?' என்றான்.

'ஐயனே, என்னுடன் தாங்கள் வயலுக்கு வரவேண்டும். வந்து கண்காணிக்கவேண்டும்' என்றான். வேதியன் இதில் ஏதோ விசேஷ மிருக்கின்றது என்று தெரிந்து அவனது வேண்டுகோளுக்கிணங்கி அவன் பின் நடந்தான். புலன்களிலிருந்த ஒவ்வொரு பயிரும் ஆள் உயரம் வளர்ந்தும், முழத்திற்குமேலும் கதிர் நீண்டுமிருக்கக் கண்டு வேதியன் வியப்புக் கொண்டான். விளைச்சல் எல்லாம் அறுவடையாகி, தேர்ந்த நெல்மணிகள் பொன்னிறமாய் மலைபோல் அம்

பாரமாகக் குவிக்கப்பட்டிருந்ததையும் கண்ணால் கண்டான். ஆயிரம் வேலி நிலங்களை ஒருவனே அறுவடைசெய்து சிலமணி நேரத்திற்குள் அடித்து அம்பாரம் கட்டியதைக் காணக்காண வேதியன் அதிக ஆச்சரியங்கொண்டான். தானே நேரில் கண்ணாரக் கண்டும் அந்த வேதியன் நம் பிக்கைப்படவில்லை. கண்களைக் கசக்கிப் பார்த்தான். கனவு காண்கின்றேனா என்று நினைத்தான். அவன் கண்டது கனவல்ல; அவனது கண்ணின் பிசகு மல்ல. உண்மையே. வாஸ்தவம் என்று வேதி யன் உணர்ந்த பின்னர் 'நந்தா! இவ்வளவு வேலை யையும் நீ ஒருவனாக விருந்து செய்திருக்கவே முடியாது. உன் மூலமாகப் பகவான் எனது நிலங்களில் என்ன ஆச்சரியத்தை யுண்டு பண்ணி யிருக்கின்றார். இது உன்பக்தியின் விசேஷத் திற்கு வெகுமதி. இக்காரியம் ஒன்றே உனது பெருமையை, உனது பக்தியின் விசேஷத்தை மடையனான எனக்குத் தெரிவிக்கின்றது. நீ தானா உண்மையான பக்தன். மாசிலாத மனத்தையுடை யவன். உனக்கு ஒப்பானவர்கள் முன்னுமில்லை பின்னுமில்லை என்றே சொல்வேன். சிறந்த பக்தனே! உன்னை எனது அடிமையாகக் கொண்டு எவ்வளவோ இன்னல்கள் உனக்கு விளைவித்தேன். இந்தக்கணம் முதல் உனக்கு நான் ஊழியன். இந்தப் பூஸ்திதி யெல்லாம் உனக்கே சொந்தம். ஆகவே, நீ என்னை ஆசீர்

வதித்து உனக்கு அருமையும், அருகாமையாகவு முள்ள அந்தப் பெருமானை, நானும் அடைய எனக்கு உபதேசித்தருளுவாய்' என்றான்.

பக்தியின் வல்லமை இவ்வளவென்று நம்மில் பலர் உணராதிருக்கின்றனர். பக்தி அரிய பெரிய காரியங்களைச் செய்யும் ஆற்றலுடையது. மலைகளைப் புரட்டுகின்றது; அகன்ற ஆழியின் மீது தாவிச் செல்லும் சக்தியைத் தருவது. அதே பக்தி, வேலையின் மீது செல்லும் நாவாய் நடுக்குறுவதேபோல் பிரபஞ்சத்தையும் நடுங்குறச்செய்யும் தன்மையையுடையது. அவ்வுயர்ந்த பக்தி எதைத்தான் செய்யாது. அதனால் ஆகாத காரியம் எது தான் இருக்கின்றது?

வியப்பும் களிப்பும் கொண்ட அந்தணன் நந்தனது கழலிணைகளில் வணங்கி நின்றான். ஆசார விஷயத்தில் நமது கொள்கைகளும் விதிகளும் கடுமையாக விருக்கின்றன. அப்படிக் கிருந்த போதிலும் மதவிஷயத்தில் அவைகள் அவ்வளவு கடுமையாக விருப்பதில்லை. நமது ஆலயங்களிலுள்ள பக்தர்களில் அநேகர் தாழ்ந்த வருணத்தில் பிறந்தவர்கள். சிலபக்தர்கள் மிகவும் இழி குலத்தில் அவதரித்தவர்கள்.

"தாமரை பொன்முத்து சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டும் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலுமென்"

என்பதிற் கிணங்க நல்லவர்கள் எக்குடியிற் பிறந்தாலும் அறிவுடையவர்கள் இகழமாட்டார்கள். நந்தன் வாழ்ந்த காலத்திலும் அந்தணர்கள், பக்தர்கள் எக்குலத்தில் அவதரித்தபோதிலும், அவர்களைப் போற்றி வணங்கி வந்தார்கள்.

வேதியன் தனக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்ததைக் கண்டு மனம் நொந்து நந்தன் அவனைத் தூக்கி நிற்கவைத்து அவனது பாதங்களில் தான் விழுந்து விழுந்து சேவித்தான். தன்விழிகளில் அருவிபோல் நீர் சொரிய 'என் ஐயனே! பறைக்குலத்துதித்த அடிமையான என் காலில் விழத் தாங்கள் என்ன பாவமிழைத்தீர்கள்' என்று உசாவினன். அதற்கு அம்மறையோன் 'நந்தா, இனி நீ பறையனுமல்ல. என் அடிமையுமல்ல. தூயமனதும், சிறந்த பக்தியும் படைத்தவன் நீ. யாதொருதடையுமின்றி நீ சிதம்பரம் செல்லலாம். நீ செல்வதன் முன் என்னை வாழ்த்திச் செல்வாயாக. உனக்கு இதுவரையில் நான் இழைத்த இன்னல்களை நீ மன்னித்துக் கடவுளின் கிருபைக்கு என்னையும் அருகனக்கக் கடவாய்' என்றுரைத்துக்கொண்டே நந்தனது கரங்களை எடுத்துத் தன்சிரசின் மீதுவைத்துத் தனக்குப் புத்தி புகட்டும்படி இறைஞ்சினன். இவ்வேண்டுகோளைக் கேட்ட நந்தன் அதிகவருத்தத்துடன் 'வேதவித்தே! புல்லறிவாளனுகிய நான் தங்களுக்கு என்ன உரைப்பேன். தாங்கள் எவ்விதம்

தங்களுடைய மனைவி மக்களையும், பொருளையும் நிலத்தையும் 'கருத்துகொண்டு நேசிக்கின்றீர்களோ அவ்விதம் அகில உலகத்தையும், சராசரப் பொருள்களையும் படைத்துக் காத்து அழித்தும் வரும் பெருமானைத் தாங்கள் நேசிக்கவேண்டும். இப்படிச்செய்து வருவீர்களானால் கடவுளின் கருணைக்கு அருகராவீர். சிற்றறிவுடையோனான நான் இவ்வளவே தங்களுக்குரைக்க முடியும்' என்று விநயமாகப் பதில் இறுத்தான்.

இவ்வண்ணம் தருமோபதேசம் செய்த நந்தனது பிரகாசமான முகத்தை ஏறிட்டுப்பார்த்தான். தாயைப் பிரிந்த சேயைப்போல் நந்தனை விட்டுப் பிரிய மனமில்லாதவனாய் மனத்தாங்கலோடு பிரிந்தான். நந்தனும் தன் தலைவனது பிரிவாற்றுமைக்கு அதிகமாக வருந்தினான். தில்லை நாதனைக் கண்டு சேவிக்கும் எண்ணம் அவனுக்கு அதிகமாக விருந்தபடியால் அதிக நேரம் அவ்விடம் தங்காமல் சிதம்பரம் நோக்கிப் புறப்பட்டான். நந்தன் சிறிதுதூரம் சென்றதும் வேதியன் பின்னே விரைவாக ஓடி 'நந்தா! ஞானக்கண்ணைத் தந்த நந்தா! என் சற்குருமணியே! மீளவும் எப்பொழுது உன்னைக்காணப் பெறுவேன். நீஎப்பொழுது அவ்விடத்தினின்றும் திரும்பி வருவாய்' என்று வழி மறுத்துக்கேட்டான்.

அதற்கு நந்தன் 'ஐயா, இனியான் திரும்பி வருவது அசாத்தியம். தங்களை நான் மீளவும்

காண்பது என்பது முடியாது. தலைவரே! சிதம்பரம் சென்றுமீண்டு வருவோர் யார்? பாவமே உருவான இப்பூமியில் மறுபடியும் வருவதற்கு மனமில்லாதவனு யிருக்கின்றேன் நான்' என்றான்.

நந்தன் கூறியவற்றிற்குப் பொருள் இன்னதென்று அறியச் சக்தியற்றிருந்தான் அவ்வேதியன். கதையின் போக்கைக் கவனித்து வரும் நாம் அப்பக்தன் உரைத்த ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் தெரிந்தவர்களா யிருக்கின்றோம்.

## IV நந்தன் சிதம்பரம் செல்லுதல்.

வேடனது வலையினின்றும் தப்பித்தோடும் மான் எவ்விதம் சந்தோஷமடையுமோ; அடிமைத் தனத்தினின்றும் விடுவிக்கப்பட்ட அடிமை எவ்விதம் ஆனந்தமடைவனோ; ஆண் குழந்தையைப் பெற்ற மலடி எத்துணைய மகிழ் வெய்துவளோ; பிறவிக்குருடன் திடீரெனப் பார்வையைப்பெற்றால் எவ்வளவு களிப்பெய்துவனோ; பழந்தனமிழந்தவர் மீளவும் அதைப் பெற்றால் எப்படி மகிழ்ச்சி யுறுவார்களோ; இழந்த மணியைப் புற்றரவு மறுபடியும் அடையின் எவ்விதம் ஆனந்தப்படுமோ அவ்விதம் நந்தன் உவகை பூத்தனன்.

'இழந்த மணிபுற்றர வெதிர்ந்ததென லானாள்
பழந்தனமிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையுயிர்ப் பித்தமலடிக்குவமை கொண்டாள்
உழந்து விழிபெற்ற தோருயிர்ப்பொறையு மொத்தாள்'

என்றுகம்பர், கணையாழிபெற்ற சீதாப்பிராட்டியார் அடைந்த ஆனந்தத்தின் அளவை ஒருவாறு வரையறுத்திருக்கின்றார். ஆனால் நந்தன் அச்சமயத்தில் பெற்றிருந்த பேரானந்தம் வரையறுக்க முடியாததாயிருந்தது. அவன் தனக்கும் தன் பிரானுக்கும் இடையில் தடையாக விருந்த அடிமைத்தனம் ஒழிந்ததைத் குறித்து அதிகமாகச் சந்தோஷமடைந்தான். சுவர்க்கத்திலிருந்த தேவர்கள் யாவரும் நந்தன் புல் வெளிகளின் மீது தாண்டவம் புரிந்து செல்லும் நேர்மையைக் கண்டு மனமகிழ்ந்தனர்.

அப்படி நடந்து போகும்பொழுது நடையின் சிரமம் தோன்றாதிருக்கப் பாட்டுகளும் பாடினான்.

"நீட்டு மணிப்பொது நடஞ்செய் திருவடிகண்டேத்தச்
 செல்கின்றேன் சிறியேன் முன்சென்ற வழியறியேன்,
காட்டுவழி கிடைத்திடுமோ நாட்டுவழி தருமோ,
 காலிளைப்பு கண்டிடுமோ, காணாதோ களிப்பாம்,
மேட்டினிடை விடுத்திடுமோ, பள்ளத்தே விடுமோ,
 விவேகமெனுந் துணையுறுமோ வேடர் பயமுறுமோ,
ஈட்டுத் திருவடிச் சமுகங் காணவு நேர்ந்திடுமோ
 வெப்படியோ திருவுளந்தானேது மறிந்திலனே"

என்று பாடிக்கொண்டே வழிநடந்தான்.

தேவர்கள், பக்தர்கள் மெய்மறந்து புரியும் நடனத்தைக் காணப் பெரிதும் விரும்புகின்றனர். அத்தோற்றமே மிகு அருமையான தென்

றும் கருதுகின்றனர். அதைத் தவிர காணுதற்குரிய காட்சி வேறொன்றுங் கிடையாதென்றும் மதிக்கின்றனர். நந்தன் தில்லையை நாடிச் செல்லும்போது ஆனந்தக் கூத்தாடியதால் பூமியும் சந்தோஷமிகுதியால் அசைந்தாடியதுபோலும். புற்களும் களிப்பெய்தித் தங்கள் தலையை நிமிர்த்தி இப்படியும் அப்படியும் அசைந்தனபோலும். விண்ணவர் யாவரும் ஆனந்த பாஷ்பங்களை மாரியெனப் பொழிந்தனர்.

நந்தன் மனம் முழுமையும் தில்லை நாதனிடம் சென்றிருந்தது. தன்னை மறந்தான்; அவனது கண்கள் கனக சபேசனையே கண்டு கொண்டிருந்தன. அவனது புத்தியோ நடராஜனது பாதாரவிந்தத்தை யடைய அவனை வற்புறுத்திக் கொண்டிருந்தது. பாம்பின்கால்களைப்பாம்புகளே யறியும். அதுபோல அன்பர்களன்றோ அன்பின் மகிமையை உணர்வார்கள்? மேலும் மலடியறிவளோ மக்கட்பேற்றின் இன்பத்தை? நந்தன் ஆனந்த மிகுதியால் நடனம் புரிவான். ஒவ்வோர் சமயம் கண்ணீரைப் பெருக்குவான். மற்றும் சில நேரம் பொறுத்துப் புன்னகைபுரிவான். சொற்ப நாழிகைக்குள் ஆயிர வேலி நிலத்தை அறுவடை செய்யும் திறமைபெற்ற நந்தனுக்கு ஆதனூரிலிருந்து கொள்ளிட நதிக்கரை வரையில் நடந்து வந்து ஒரு பொருட்டாகத்தோன்றவில்லை. அவ்வாற்றின் கரையைச்சேர்ந்த நந்தன், வெள்ளப் பெருக்

கெடுத்து இரு கரையும் புரண்டு, பக்கத்திலிருந்த விருட்சங்களையும், செடிகொடிகளையும், ஆடுமாடு களையும், குடிசைகளையும், வேகமாக அடித்துச் செல்வதைக் கண்டான். அலைகள் ஒன்றின்பின் ஒன்றாய்த் தொடர்ந்து தோன்றி மறைந்தன.

அவ்வெள்ளத்தின் கம்பீரமான தோற்றமே தோற்றம்! சில விடங்களில் தண்ணீரானது தன் நிலையுணராத கட் குடித்தவர்கள்போல் தடுமாறி நிலை தவறிச்சென்று கொண்டிருந்தது. இன்னும் சில பிரதேசத்தில், பிடரியை உதறிக்கொண்டு கர்ச்சனை செய்துவரும் சிங்கத்தைப்போல் சப்தம் செய்துகொண்டே ஓடியது. மற்றொரு மருங்கில், கொழுத்து உருண்டு திரண்ட முசுப்பையுடைய காளைமாடு போல அசைந்தசைந்து பிரவாகித்துக் கொண்டிருந்தது. மற்றோர் புறத்தில் பெரிய மலைப் பாம்புபோல் அவ்வாற்றின் நீர் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. இவ்விதம் கொந்தளித்துச் செல்லும் ஆற்றை நந்தன் கண்டான்.

நந்தன் சிதம்பரத்திற்குச் சென்ற அந் நாளில் இருப்புப்பாதையும் புகை வண்டியும் கிடையாது. அவனது காலத்துக்குப் பின் பல நூற் றாண்டுகள் கழிந்த பின்னர் தான் அவை கண்டு பிடிக்கப்பட்டன. புகைவண்டியை நந்தன் கண்டி ருப்பானாயின் 'இதோ என் கடவுள் இருக்கின்றார். மதத்தையும், சாதியையும், வயதையும், அந்தஸ் தையும் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் எப்

படிப்பட்டவர்களையும் அவரவர்கள் செல்ல விரும்பும் இடங்களுக்குக் கண்ணுக்குத்தோற்ருததோர் சக்தியினுலும் பிரணவ சத்தத்துடனும், ஓங்காரத் தொனியுடனும் இது ஒலித்துக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது. இவ்விதம் ஒலித்துச் செல்வதால் இப்புகைவண்டி உலகமே சப்தத்திஞலாயது என்றும் உலகம் சப்தமயம் என்றும் வெளிப்படுத்துகிறது" என்று உடனே சொல்லியிருப்பான். கவனித்து ஆராய்ந்து விசாரிப்போமாஞல் ஒவ்வொரு விஷயத்திலும் தத்துவம் நிறைந்திருப்பது புலனுகும்.

வெள்ளப் பெருக்கெடுத்துச் செல்லும் அந்நதியை யணுகி 'இப்புனிதப் புனலும் என் தலைவனைப்பற்றிப் பாடி நடனம் புரிகிறது. நானும் அதைப்பின் பற்றுவேன்' என்று தானும் நடனம் புரிந்து பாடலுற்ருன்.

அச்சமயம் ஓர் ஓடம் அவன் நின்றிருந்த கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அமாவாசை யினிருள் போன்ற நிறமுடையவன் ஒருவன் அதைச் செலுத்திக் கொண்டு வந்தான். அவனுடைய முகம் சூரியனது வெப்பத்திஞல் பின்னும் கருகிப்போ யிருந்தது. தேகம் முழுவதும் வியர்வை கொட்டிக்கொண்டு மிருந்தது. ஆஞல் அவன் மெய்யினில் திருநீறு பூசப்பட்டிருந்ததால் கற்பூர மணம் வீசிக்கொண்டிருந்தது.

நந்தன் அவ்வோடமோட்டியைக் கண்டதும் அவனே வணங்கினுன். ஏனென்ருல் அவனுடைய கண்களுக்கு அப்படகோட்டி நடராஜனுக்த் தோன்றினுன். அப்படகினில் அக்கரை செல்ல வமர்ந்தான். அமர்ந்த பின் அப்பரசலில் உட்கார்ந்திருந்த மற்றவர்கள் யாவரும் அதிய்பாச்சரியப்படும்படி நடனசிகாமணியின் என்றும் அழியாத புகழைப் பாடலானுன்.

"அம்பலத்தரசே யருமருந்தே
யானந்தத்தேனே யருள்விருந்தே
பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெலாம்புகழ் கண்ணியனே
படனவிவேக பரம்பரவேதா
நடனசபேச சிதம்பரநாதா
அரிபிரமாதியர் தேடியநாதா
அரகரசிவசிவ ஆடியபாதா
அம்பரவிம்ப சிதம்பரநாதா
அஞ்சிதரஞ்சித குஞ்சிதபாதா
இக்கரைகடந்திடி லக்கரையே
இருப்பது சிதம்பரசர்க்கரையே
என்னுபிருடம்பொடு சித்தமுதே
இனிப்பது நடராஜபுத்தமுதே
ஐயர்திருச்சபை யாடகமே
ஆடுதலானந்த நாடகமே
நடராஜனெல்லார்க்கு நல்லவனே
நல்லவெலாஞ் செயவல்லவனே
ஆனந்தநாடகங் கண்டோமேபர
மானந்த மோனகங்கொண்டோமே

நடராஜவள்ளலை நாடுதலே
நன்றொழிலாம் விளையாடுதலே
அருட்பொது நடமிடு தாண்டவனே
யருட்பெருஞ்சோதி யென்னாண்டவனே
நடராஜர்பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார்பாட்டெல்லாம் வெறும்பாட்டு
சிதம்பரப்பாட்டே திருப்பாட்டு
சிவர்கள்பாட்டெல்லாம் தெருப்பாட்டு
அம்பலப்பாட்டே யருட்பாட்டு
அல்லாதபாட்டெலாம் மருட்பாட்டு
அம்பலவாணனை நாடினனே
அவனடியாரொடுங் கூடினனே''

என்று நந்தன் பக்திமேலீட்டினால் தில்லை நாதனின் மகிமையைக் குறித்து வெகுவாகப் பாடினான்.

அந்தத்தோணியும் ஆற்றில் நடனம் புரிந்தது. நந்தனும் அதனுள் ஆடினான். அவனுடன் அதில் அமர்ந்தவர்களனைவரும் ஆடினர். கறுத்த முகத்தையுடைய செம்படவனும் தன் துடுப்பை மறந்து நடனம் புரிவோர்களுடன் சேர்ந்து ஆடினான். உலகத்திலுள்ளவர்கள் யாவரும் சேர்ந்து ஆடும்படியான அருமையான ஆட்டம். அதைக் காண்பதே ஒருபெரிய கொண்டாட்டம். இவ்வளவு மகிமைபொருந்திய ஆட்டம் அரை நாழிகையே நிகழ்ந்தது. இவ்வளவுபேர் அப்படகில் நடனம்புரிய இப்படியும் அப்படியும் அசைந்து அசைந்து ஒருவரும் துடுப்பினால் தள்

ளாமலே தானாக அக்கரையை அப்படகு அடைந்தது. நந்தன் ஒரே குதியாக அக்கரையின்மீது குதிக்கலானான். நடராஜமூர்த்தியின் க்ஷேத்திரத்தில் தன் பாதங்களை ஊன்றினான். வெகு நாளாகக் காணவேண்டுமென்று அவாவுற்ற தில்லையைச் சேர்ந்தான்.

தன்னை அக்கரையில் சேர்த்த அப்படகோட்டிக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைத் தன் மடியிலிருந்து எடுத்துக்கொடுத்தான். ஆனால் அவ்வெளிய செம்படவன் கண்களிலிருந்து நீரைப் பெருக்கி "என் தலைவ, என் ஐயனே, தாங்கள் இனிப்பறையனல்ல; கடவுள் தங்களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு விட்டார். நானே பறையர்க்கடிமை. தங்களிடமிருந்து ஒருகாசும் வாங்கேன்" என்று நந்தன் கொடுக்க வந்ததை மறுத்தான்.

கொள்ளிடத்தைக் கடந்து அக்கரையைச் சேரப் பத்து நிமிடங்களேயானாலும் அச்சிறிது நேரத்திற்குள் அவ்வுண்மைப்பக்தன் கண்டுபிடிக்கப்பட்டு ஒரு கூட்டத்தவர்களால் வணங்கிப் போற்றப்பட்டான். நந்தனை அவர்கள் சூழ்ந்து சென்றனர். படகோட்டி தன்படகை விட்டுவிட்டான். வியாபாரி தன் வணிகத்தொழிலை மறந்தான்; உழவன் தன் உழு தொழிலை மறந்தான்; ஒவ்வொருவனும் தன்தன் தொழிலைக் கவனியாது விட்டான். நந்தனைச் சூழ்ந்து அனை

வரும் ஆனந்தத் தாண்டவம் புரியத் தலைப்பட்டார்கள்.

தில்லைநாதன் கோயிலின் கோபுரம் சற்று தூரத்தில் கம்பீரமாய் விளங்குவதை நந்தன்கண்டான். அவ்வழகிய விமானம் அவனை அழைத்தது போலும் அவன் மனத்திற்குத் தோன்றிற்று. அங்கிருந்தபடியே அவன் நிமிர்ந்து பார்த்தான். தரைமீது சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து "ஆ! என் ஐயனே! தங்களுடைய ஆணையினால் அகில உலகமெல்லாம் அதனதன் வேலையைச் செய்து வருகின்றது. தங்களைப்போன்ற ஆகாயம் எல்லோரையும் தன்கீழ் அடக்கிப் பரந்திருக்கின்றது. தங்களது பக்கத்திலுள்ள நட்சத்திரச் செல்வத்தினிடையிலும், மலைகள், நதிகள் இவைகளின் மத்தியில் கொசுவைப்போன்ற யான் எங்கிருக்கின்றேன்? அல்லும் பகலும் அலைகளால் அரற்றும் ஆழியில் ஒரு துளியாக வேனும் இருக்கத்தகுந்தவனா நான்? என்னைவிட அந்த நீர்த்துளி எத்துணைய மேம்பாடுற்றிருக்கின்றது. பேதையாகிய என்னைவிட அது ஞாயிறின் வெப்பத்தையும், வருணனின் தண்புனலையும் சமமாகப்பாவிக்கும் தன்மையைப் பெற்றிருக்கின்றது. அவ்வெண்மணற் குன்றுகளும் தங்கள் கிருபைக்குப் பாத்திரமாயிருக்கின்றன. என்ன ஆச்சரியம்! தேவதேவனே! தங்களது திருக்கோயில்போல் ஸ்திரமாகப்

பேதையான யான் நிலத்தில் நின்று கொண்டிருக்கின்றேன். காற்று மும்முரமாக அடிப்பினும் சரி, வெயில் உக்கிரமாகத் தீய்ப்பினும் சரி இதை விட்டுப் பெயரேன். தமது திவ்விய ரூபத்தையே தியானித்துக் கொண்டிருப்பேன். யார் என்ன சொல்லினும் கவனிக்கவுமாட்டேன்;காதுகொடுத்துக் கேட்கவுமாட்டேன்'' என்றுரைத்தான்.

நடராஜ மூர்த்தியின் திவ்விய மங்கள ரூபத்தை இதயத்தில் பதித்துத் தியானித்துக் கொண்டிருந்தபடியினுல், குயில்கள் கூவும் சோலைகளின் மீதும் மற்றுமுள்ள காட்சிகளிலும் தன் கவனத்தைச் செலுத்தினவனல்லன். எங்கு நோக்கினும் அங்குக் கனகசபேசனது விக்கிரகத்தைக் காண்பது போலிருந்தது.

சற்று தூரத்தில் ஆலயத்தின் கோபுரவாசல் நந்தனுக்குப் புலப்பட்டது. அதைக்கண்ணுற்றதும் அவன் பரவசமடைந்து சொல்லலுற்றுன். 'இதோ கைலாயத்தின் வாயில் திறந்திருக்கின்றது. புண்ணியர்கள் ஒருதரம் நுழைவார்களானுல் மீளவும் அதினின்று வெளிவரமாட்டார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் இதனுட் புகுந்தவர் தம் பக்தி மேலீட்டினுல் பெருமானைப்பாடி மீண்டும் வெளிவந்திலர். கவிகளுக்கரசாக விளங்கியிருந்த அப்பர் சுவாமியும் வேதம்போன்ற பாடல்களைப்பாடி இக் கைலாயத்தினுட் சென்றவர் திரும்பவும் வெளிவந்தாரல்லர். இதே கோபுர

வாயிலுள் நுழைந்த சுந்தரரும், பரமாத்மாவுடன் கலந்து சுகமனுபவித்து வெளியேறினவரல்லர். சகோதரர்களே! இனத்தவர்களே! நண்பர்களே! இக்கோபுரவாயினுள் தான் பகவான் இருக்கின்ருர். இதேயிடத்தில் இல்லாமலு மிருக்கின்ருர். உருவத்துடனும் உருவமில்லாமலும் இருக்கின்ருர். நடனம் புரிந்தும், நடனம் புரியாது மிருக்கின்ருர். அவரது சன்னிதானத்தில் மூடன் அறிவைப் பெறுகின்ருன். இதே இடத்தில் தான் அறிஞர்கள் தங்கள் அறிவை இழக்கின்றனர். இங்குதான் அவர் ஆகாயமாகவும், ஒளியாகவும் தோன்றுகின்ருர். இப்பிரதேசத்தில் அவர் சிருஷ்டி கர்த்தாவாகவும், சம்மாரஞ் செய்பவராகவும் இருக்கின்ருர்' என்றி யம்பியவாறு ஆலயத்தி னருகே வரலானுன். அவனுடன் பக்தர் குழாமும் தொடர்ந்து சென்றது.

## VII

### நந்தன் வருந்துதல்.

நடராஜ மூர்த்தியைச் சேர்த்துத் தில்லையில் மூவாயிரம் தீட்சதர்களிருந்துவந்தனர். அக்காலத்தில் தீட்சதர்கள் யாவரும் ஆசாரத்திலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கி யிருந்தார்கள். அவர்கள் சமஸ்கிருதத்திலும் தமிழிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இப்பொழுதுள்ள தீட்சதர்கள்

ஆசாரங் குன்றியவர்களாகவும், பாஷாபி விர்த்தி குன்றியவர்களாவு மிருக்கிறார்கள். இப்பொழுதுள் ளவர்கள் உச்சிக் குடுமி வைத்துக் கொள்வதில் எவ் வளவுக்கெவ்வளவு ஆர்வங் கொண்டிருக்கின்றார் களோ அவ்வளவுக்கவ்வளவு அக்காலத்தவர்கள் தெய்வபக்தியில் ஆர்வங்கொண்டிருந்தனர். நமது தேசத்தில் சூரியனும் சந்திரனும்தவிர மற்றவை கள் எல்லாம் தாழ் வடைந்துவிட்டன.

நந்தன் மேல் நடந்து சென்றானாலும் தான் இழிகுலத் துதித்தவன் என்பதை மறந்தவனல் லன். தீட்சதர்களனைவரும் அக்கூட்டத்தினரை யும், அதன் நடுவில் பரமசிவனே போல் விளங்கி யிருந்த நந்தனையுங்கண்டு, அவன் பறைக்குலத் தினன், அவனருகே உயர்குலத்தவர்ளாகிய தாங் கள்செல்லுவதும் கூடாது என்று சற்று தூரத்தி லேயே நின்று கவனித்தார்கள். அவனது முகத் தில் தேஜஸ் ஜொலித்ததைக்கண்டு ஆச்சரியப்பட் டனர். நந்தன் ஆலயத்தையணுக அதிக உற்சாகத் தையும் ஊக்கத்தையு மடைந்தான். இதுகாறும் அவனது வதனத்தில் பிரகாசித்துவந்த தேஜஸ் பின்னும அதிகமாக ஜொலித்தது.

அப்பொழுது சாயங்காலம். சிறிது போழ் திற்கெல்லாம் சந்திரன் தன் தண்ணென்கிரணங் களைப் பரப்பி நீலநிறம் வாய்ந்த வானில் வெண் டாம்மரையே போல் விளங்கினன். அம்மதியைக் கண்டு அவன் பாடலுற்றான்.

"தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே—ஒரு
தந்திரநீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே.
நாதமுடிமே லிருந்த வெண்ணிலாவே—அங்கு
நானும்வர வேண்டு கின்றேன் வெண்ணிலாவே.
சச்சிதா நந்தக் கடலில் வெண்ணிலாவே—நானுந்
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே.
இராப்பகலில்லாவிடத்தே வெண்ணிலாவே—நானும்
இருக்க வெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே.
வித்தில்லாமலே விளைந்த வெண்ணிலாவே—நீதான்
விளைந்த வண்ணமேது சொல்லாய் வெண்ணிலாவே.
ஞானமாய் விளங்கும் வெண்ணிலாவே—ஒரு
ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலாவே."

178882

என்று இனிமையாகப்பாடி அதை உற்றுநோக்கிப் பேசுவானாயின். 'ஏ, தண்மதியே, லோகநாகயனான பரமசிவன் தலையின்மீது அமர்ந்திருக்க நீ என்ன தவமியற்றினாய்? அத்தவத்தை யெனக்குத் தெரிவிக்கமாட்டாயா? பகவானது அன்பிற்குப் பாத்திரமாக ஒருவழி புகலாயோ? அக்கருணையங் கடலில் யானும் சேர்ந்துய்ய ஒரு மார்க்கத்தை யெனக்குக் காட்டாயோ? யாவருக்கும் மதியளிக்கும் தண்மதியே! அடியேனுக்கு மாத்திரம் அம்மதியைத் தராதிருப்பது நேராமோ? எனது ஆத்மநாதரை நான் அடைய ஒரு ஞானநெறியை எனக்குக் காட்டுவாயா? நீ மாத்திரம் அவருடைய சிரசில் வீற்றிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றாயே-இஃதென்ன பட்சபாதம். உன்னைச் சடையில் தாங்கிக்கொண்டிருப்

பதனால் அவர் கௌரவமடைகின்றார் போலும்'' என்று தன்னை மறந்து பக்தி வசப்பட்டுப் பேசிக்கொண்டே செல்லலானான். அவனது மனம் முழுமையும் கனகசபேசனிடம் சென்றிருந்தது. எங்கணும் நடராஜ மயமாக அவனுக்குத் தோற்றியது. கண்ணபிரானைக் காதலித்த கோபிகா ஸ்திரீகளின் கண்ணிற்கு எங்கும் கிருஷ்ணனாகத் தோன்றியதுபோல் நந்தன் விழிகளுக்கு எங்கும் நடராஜமூர்த்தியாகத் தென்பட்டது. இம்மாதிரி தோன்றுவதற்குச் சிறந்த பக்தியே காரணம். இச்சிறந்த பக்தியைத்தான் தாயுமான சுவாமியாரும் சிலாகித்துத் தெள்ளிய இனிய நடையில்,

"சங்கர சங்கர சம்பு—சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு.

ஆதிய னாதியுமாகி எனக்
கானந்த மாயறிவாய் நின் றிலங்குஞ்
சோதி மௌனியாய்த் தோன்றி அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி
சங்கர சங்கர சம்பு—சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு"

என்று பாடியிருக்கின்றார்.

நந்தன் பற்பலவிதமாகப் பெருமானைத்தோத்திரஞ் செய்தான். இனிய கீதங்களைப்பாடி வேண்டினான். எதற்கும் பகவான் அவன் மீது கிருபை பாலிக்காதது கண்டு அவன் மிகவும் வருந்தலா

னன். அவன் ஊணும் கொண்டிலன்; உறக்கமுங் கொண்டிலன். அல்லும் பகலும் தில்லை நாதனைத் தியானஞ் செய்து பார்த்தான். யாவும் பயனற்றுப் போனதைக்கண்டு நந்தன்,

"பட முடியாதினித்துயரம் பட முடியாதரசே!
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
னுடலுயிராதிய வெல்லாம் நீ யெடுத்துக் கொண்டுன்
னுடலுயிராதிய வெல்லா முவந்தெனக்கேயளிப்பாய்.
வடலுறு சிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண்
மணியே! என்குருமணியே! மாணிக்கமணியே!
நடன சிகாமணியே! என்னவ மணியே! ஞான
நன்மணியே! பொன்மணியே! நடராஜ மணியே!

என்றும்,

வாழைப்படி வாழை யெனவந்த திருக்கூட்ட மரபினில்
யானொருவனன்றோ வகையறியே னிந்த [தருமோ
வேழை படும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ விது
விதுமுறையோ விது தருமந்தானோ
மாழை மணிப் பொது நடஞ் செய்வள்ளால் யானுனக்கு
மகனலனோ நீ யெனக்கு வாய்த்த தந்தை யில்லையோ
கோழை யுலகுயிர்த் துயரமினிப் பொறுக்கமாட்டேன்
கொடுத்தருருணின் னருளொளியைக் கொடுத்தளிப்
[பொழுதே"

என்று உருக்கமாய்ப் பாடித் தன்மீது அருள் பாலிக்கும்படி வேண்டினன். தனக்கு வேறுகதி யொருவரும் கிடையாதென்றும், அடையும் மார்க்கம் இன்னதென்று உபதேசிப்பவருமில்லையென்றும் தில்லைநாதனே தனக்குத் தஞ்சம் என்று

அடைக்கலம் புகத்தீர்மானித்துத் தன் இருகைகளையும் சிரசிற் கூப்பி, சாஷ்டாங்கமாகத் தரைமிசை பணிந்து,

“ கருணா நிதியே! அபய மபயம்,
கனகா கரனே! அபய மபயம்,
அருணடகனே! அபய மபயம்,
அடிகாவமலா வபய மபயம்,
தருணா தவனே! அபய மபயந்,
தனி நாயகனே! அபய மபயம்.
தெருணுறுவா! அபய மபயந்
திருவம் பலவா! அபய மபயம்”

என்ற கீதம்பாடி நின்ருன்.

இவ்வபயமொழியைக் கேட்ட கனகசபேசன் மனமிரங்கி, இனி பக்தனைச் சோதிக்காது, விரைவினில் அவனைச் சன்னிதானத்திற்கு அழைத்துக் கொள்ளவேண்டும் என்று உத்தேசங் கொண்டார். தில்லை தீட்சதர் யாவரும் அயர்ந்து உறக்கங் கொண்டிருக்க ஏககாலத்தில் அனைவரும் ஒரே மாதிரியான கனவைக் காணும்படி செய்தார். ஒவ்வொருவரும், பக்தர்கள் யாவரினும் மேலானவனும் பரிசுத்தமானவனும் பறைக்குலப் பக்தனுமான நந்தனை அந்தணகுலத்தில்சேர்த்துக்கொள்ளும்படி நடராஜ மூர்த்தி ஆக்ஞா பித்ததாகக் கனவு கண்டார்கள்.

பொழுதும் புலர்ந்தது. கதிரவன் குணதிசையில் உதிக்கலானன். பறைக்குலப் பக்தனுன நந்

தன் பிராமணர் குலத்தில் சேர்த்துக் கொள்ளப் படும் வைபவத்தைத் தானும் நேரில்கண்டு ஆனந்தங்கொள்ள விரைவாகச் சாகரத்தில் நீராடி, காவியங்கி தரித்ததுபோல் செவ்வானம் பரப்பி சூரியன் உதயமானான். உஷத்காலத்தில் பிராமணர்கள் எல்லோரும் நன்னீராடி, திருநீறணிந்து, உருத்திராக்ஷ மாலையைக் கழுத்திலணிந்து ஆலயத்தின் கண்ணுள்ள பொது மண்டபமான தேவசபையில் வந்தமர்ந்தார்கள்.

## VII

### நந்தன் முத்திபெறுதல்.

தீட்சதர்களனைவரும் தேவசபையில் வந்தமர்ந்த பின்னர், அவர்களில் மூத்தவரும், அறிஞருமான அப்பய்ய தீட்சதரவர்கள் அவை நடுவில் எழுந்திருந்து, இரவிற் தாம் கண்ட கனவைச் செப்பலுற்றார். தாம் உறங்கும்போது தம் கண் முன்பாக நடராஜமூர்த்தி தோன்றிய விதத்தையும், நந்தனை அக்கினியில் குளிப்பித்து அந்தணர் குலத்தில் சேர்த்துக் கொள்ளும் வழியை அவர் சொல்லிய விதத்தையும் எடுத்துக் கூறினார். அவருக்கு அடுத்த படியில் பெரியவரான குப்பண்ண தீட்சதர் சபையோருக்குத்தாம் கண்ட சொப்பனத்தை வெளியிட்டு அப்பய்ய தீட்சதர் கூறியதை ஆமோதித்தார். அதன் பிறகு, சுப்பய்ய தீட்சதர் முற்கூறிய இருவருக்

கும் நமஸ்காரஞ் செய்து அவர்கள் வெளியிட்ட தைப்போல் தானும் கனுக்கண்டதாகக் கூறினர். ஒரே மாதிரியான கனவை எல்லோரும் கண்டிருப் பதைக்கேட்க வியப்படைவதாகவும் அவர் கூறி னர். அவருக்குப்பின் நடராஜதீட்சதரும் அவ் வாறே உரைத்தார். மற்றுமுள்ள ஏனைய தீட்ச தர்களும் ஒரே தடவையாக எழுந்திருந்து அதே சொப்பனத்தைத் தாங்களும் கண்டதாக ஏகோ பித்துரைத்தார்கள்.

தில்லை நாதனுன நடராஜமூர்த்தி தங்களுக்கு ஆக்ஞாபித்த பிரகாரம் உடனே நந்தனை பிராமண வருணத்தில் சேர்த்துக்கொள்ள அச்சபையினர் யாவரும் தீர்மானித்தனர். பறையனைப் பிராம்மண னுக்க வேண்டுவனவெல்லாம் சேர்க்கப்பட்டது. அக்கினி வளர்த்த வேண்டிய முயற்சிகள் நடந் தன.

நிற்க, நந்தன் இதுகாறும் மயக்கம் கொண் டிருந்தவன், அப்பொழுதுதான் தெளிந்து விழித்தான். தில்லைநாதனை வாய்விட்டுத் தோத் திரஞ் செய்யவும் சக்தியற்றிருந்தான். கடவுள் தன் மீது கிருபாநோக்கம் பாலிக்காதனுல் விசன மடைந்தான். ஏதேனும் வாய்திறந்து சொல்ல வும் முடியாதிருந்தது. துக்கம் அவனது தொண் டையில் அடைத்துக் கொண்டது போலும் அவன் உணர்ந்தான். தன்னுடைய பிரார்த் தனைகள் யாவும் வியர்த்தமானதைக் காண அதிக

துயரமடைந்தான். அப்பொழுதுதான் தீட்சதர்களனைவரும் ஒரு கூட்டமாக அவன் முன் வரலாயினர். வந்ததும் அவர்கள், அவன் ஆச்சரியப்படும்படி வணங்கினர்கள். அவர்கள், தாங்கள் கண்ட விந்தையான கனவை அவனுக்குரைத்தார்கள்.

நந்தனை அவர்கள் அழைத்துக்கொண்டு, தென்னண்டை மாடவீதியின் கோடியை அணுகினர்கள். அவ்விடத்தில் அக்கினி மூட்டப்பட்டிருந்தது. பக்தியே அவதாரமெடுத்த நந்தன் உடனே ஜ்வலித்துக் கொழுந்து விட்டெரியும் தீயில் குதித்து விட்டான். அக்கினி, நாற்புறமுஞ் சூழ்ந்து எரியும்பொழுது நந்தன் பக்தி கொண்டு பேசலுற்றான். "என் தந்தையின் கழலிணைகள் கார்காலத்துச் சந்திரனது குளிர்ச்சி பொருந்திய கிரணங்களைப் போலும், விடாது வீசும் தென்றற் காற்றைப் போலவும், எப்பொழுதும் சுரந்துகொண்டேயிருக்கும் நீரூற்றைப் போலும், தேனீக்கள் ஒன்றுசேர்ந்து ரீங்காரஞ் செய்யும் குளம் போன்றும் இவ்வக்கினி குளிர்ந்திருக்கின்றது" என்று அவன் களிப்புடன் பேசுவானாயினன்.

தீயில் குதித்த நந்தன் வாட்டமின்றி சந்தோஷமாக மந்தகாச முகத்துடன் வீற்றிருப்பதைக் கண்டு மற்றவர்கள் வியப்படைந்து, 'பக்த சிரேஷ்டனே! அக்கினியில் குதித்தும் அது

உன்னைத்தகிக்காது ; ஜலமும் உன்னை நனைக்க முடியாது; கட்கமும் உன்னை ஊடுருவிச் செல்லாது; காற்று உன்னை அசைக்கவும் இயலாது உனது பறைக்குலப்பிறவி அக்கினியால் கொளுத்தப்பட்டுப் போய்விட்டது. இனி நீ பிராமணனாக மாறிவிட்டனை. உனது கர்மாக்கள்யாவும் இத்தீயினால் தகிக்கப்பட்டு, இப்பொழுது பரிசுத்தனாகவிளங்குகின்றாய்' என்றுரைத்தனர்.

இந்துமதத்தின் ஐதீகங்கள் எல்லாம் உண்மையானவை. இன்றையவரையிலுங் கூட இந்துக்கள், கொழுந்து விட்டெரியும் தணலின்மீது, 'நெருப்புத்திருநாள்'கொண்டாட்டத்தில் திரௌபதியின் மகிமையை உறுதிப்படுத்த அக்கினியின்மீது நடக்கின்றனர். அப்பக்தர்கள், தங்களால் செய்யக்கூடாத அருமையான காரியங்களை அவர்கள் வழிபடுங்கடவுளின் பக்தி விசேஷத்தினால் செய்து முடிக்கும் ஆற்றல் பெறுகின்றனர்.

ஒவ்வொரு வருஷமும் தென்இந்தியா இருப்புப்பாதை வண்டித்தொடர் சிதம்பர க்ஷேத்திரத்திற்கு எண்ணிறந்த அன்பர்களைச் சுமந்து செல்கின்றது. அக்கூட்டத்தவர்கள் யாவரும் பக்தியுடன் செல்பவர்களல்லர். சிலரே பகவானின் பக்தி கொண்டு செல்கின்றனர்.

நந்தன் அக்கினியில் குளித்து ஒருவித பாதையின்றி பரிசுத்தமாக எழுந்திருந்தான்.

தங்கத்தை உருக்க உருக்க மாற்று அதிகரிப்பதைப் போலும், இரத்தினத்தை சாணையிட்டுத் தீட்டத் தீட்ட நீரோட்டமும், பிரகாசமு மடைவதைப் போலவும், சந்தனக்கட்டையைக் கல்லில் உறைக்க உறைக்க நன்மணங்கமழ்வது போலும், அவன் பொலிவடைந்து விளங்கினான். எரிச்சலையும், தேகபாதையையும் கொடுக்கும் வெந்தணல் அவனுக்குக் குளிர்ச்சியையும், ஆரோக்கியத்தையும் கொடுத்தது.

தென்னண்டை மாடவீதியி னின்றும் அம்மறையவர்கள் கீழ்க்கோபுரவாயிலின் மூலமாக அவனை யழைத்துச் சென்றனர். சுப்பிரமணிய சுவாமி சன்னிதியின் பக்கமாகவும், சதுரக் குளத்தின ஓரமாகவும், தேவ சபையைக் கடந்து கோவிந்தராஜப் பெருமானுக்கும், நடனம்புரியும் நடராஜபிரானுக்கும் நடுவிலிருந்த பொது மண்டபத்தை யடைந்தார்கள். விவாக நாளன்று மணமகள் சர்வாபரணாலங்கிருதையாகி, மணமகனின்கையைப் பிடித்துச்செல்லஎவ்வளவு ஆனந்தமும் பரவசமும் அடைவாளோ; அவ்வளவுக்கதிகமான ஆனந்தத்துடன் வேதம் போன்ற இனிமையான பாட்டுகளைப் பாடிக்கொண்டே அவன்தேவசன்னிதானத்தையடைந்தான். அதேயிடத்தில் நால்வரில் ஒருவரான அப்பர் சுவாமிகள் ஒருகாலத்தில் நின்று பக்தி நிறைந்த பாட்டைப் பாடியிருக்கின்றார். அது பின்வருமாறு.

" அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை
யருமறையி னகத்தானை யணுவையார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத் தேவர்கடங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே "

அச்சன்னிதியில், மாணிக்கவாசக சுவாமிகளும் பக்தியினால் ஆனந்தப் பரவசமடைந்து உபநிஷத்துக்கள் போன்ற கவிகளைப் பாடியிருக்கின்றார். அந்தநடராஜருடைய முன்னிலையில் துறவிகளுக்கு வேந்தரே போன்றதாயுமானசுவாமியாரும் தம்விழிகளில் நீர்ப்பெருக, வேதமனைய பாட்டுகளை வெளியிட்டிருக்கின்றார். தங்களின் பிற்காலத்தில் தோன்றும் பக்தர்கள் தங்களைப் பின்பற்றும்படி நன்னோக்கங்கொண்டு அவர்கள் உபதேசம் போன்ற பாட்டுகளை வெளியிட்டனர்போலும். அப்பெரியார்கள் நின்று பாடிய இடத்திலேயே நந்தன் நின்று கொண்டிருந்தான். கனகசபையின் இருபுறத்திலுமுள்ள பெரிய மணிகள் ஒலித்துக் கொண்டிருந்தன. இதனிடையில் அப்பய்ய தீட்சதர் கர்ப்பக்கிருகத்தினுள் சென்று புகவானுக்குப் பூஜைகள்செய்து கற்பூர ஆரத்தி செய்தார். அன்று புதியதாக அந்தணவருணத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பக்தனை

முன்னிட்டு, தேவாலயத்தில் விசேஷ பூஜையும் நடந்தது.

அஜோமுகி அசுரனிடமிருந்து விடுபட்ட சீதாப்பிராட்டியார் எவ்விதம் தன் நாதராம் ஸ்ரீராமரை இறுக்கக்கட்டிக் கொண்டனளோ, அதைப் போலும்; தன் நாயகனும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தன்னிடம் வராததனால் வருந்தின ராதை, அவர் வரக்கண்டு விரைந்து சென்று ஆலிங்கனஞ் செய்து கொண்டதைப் போலவும், பறையனான நந்தன் தன் இருதய கமலவாசனும், பக்திக்குறைவிடமும், அன்புக் களஞ்சியமுமான அழகுமிக்க நடராஜமூர்த்தியை ஆலிங்கனம் செய்து கொள்ளத் தாவிச்சென்றான்.

நடராஜமூர்த்தி தனது நான்கு கரங்களி லொன்றில் என்றும் அழியாத ஆத்மஜோதியை யும், தமது வலது காலினால் மாயையை அமுத்தி, இடதுகாலை உயரத்தூக்கி நிற்கின்றார். அவ்விதம் தம்முடைய இடது காலைத் தூக்கியிருப்பதினால் பக்தர்கள், தண்ணிழலளிக்கும் ஆலமரம் போல் விளங்கும் அதன்கீழ்ச் சரணமடையவேண்டுமென்றே ஒருபாதத்தைத் தூக்கி நிற்கின்றார்.

பறைக்குலத்தில் தோன்றிய நந்தன் அந்தணர் குலத்தில் மறைந்தனன். பிராமணனான நந்தன் மீளவும் அழியாத தனிப்பெருஞ் ஜோதியும், பரம்பொருளுமான காணுதற்கரிய நடராஜமூர்த்தத்தில் ஜோதியாகி ஐக்கியமானான்.

நந்தனது ஸிஷ்யர்களும், மற்றுமுள்ள தீட்சதர்களும் ஆச்சரியத்திலால் ஒன்றுந் தோன்ருது ஸ்தம்பித்து நின்றுவிட்டார்கள். சில நிமிடங்கள் கழிந்தபின்னர் அவர்கள் தங்கள் உணர்ச்சிபெற்று பின்வரும் விதம் மொழிவாராயினர்.

"ஏ! சாந்தமூர்த்தியே! நடராஜா! தங்களது அடிமையாகி நிதமும் தங்களைப் பிரார்த்தித்து வழிபட்ட எங்களது பக்தியெல்லாம் தேவரீருடைய பாதகமலங்களைக் கழுவும் நீராகவிருந்தது போலும். நந்தன் எப்பொழுதும் தங்களை யடையவேண்டு மென்று தியானித்து வந்தது மன்றித் தன் ஆன்மாவைத் தேவரீருக்குத் தியாகமுஞ் செய்திருக்கின்ருன். அவன் தேவரீரது அன்பைப்பெறுவது முறைமையே. வேதங்களின் இனிய ரசமே! அமிர்தமே! தெவிட்டாததேனே! தயாநிதியே! தேவரீரது கிருபாகண்ணேக்கத்தை விவரிப்பாரு முண்டோ? ஏ நடராஜா" வென்றுரைத்தனர்.

அவ்விட மிருந்த பக்தர்கள் எல்லோரும் 'நடராஜா நடராஜா, நர்த்தன சுந்தர நடராஜா' என்று ஆனந்தத் தாண்டவம் புரிந்தனர்.

## IX

### 'நந்தன் சரித்திரம் ஆனந்தம்'

வாசகர்களே! இதைக்கண்டு நீவிர் குறைகூற வேண்டாம். சைதன்னிய முனிவர் தண்

ணீரில் பிரதிபலித்த சந்திரனைக் கண்டு வெகு வேகமாகப் பின் சென்ற விஷயத்தைக் கவனத்திற்கொள்ளுங்கள். பைத்தியக்காரனும், தத்துவ சாஸ்திரியும், காதலனும் ஓரினத்தைச் சேர்ந்தவர்கள். அவ்விதமான பக்தி சிறப்புற்றதல்ல. பக்தியானது ஜோதியைவிட மேலானதல்ல. ஜோதியும் உண்மைப் பக்தியைக்காட்டிலும்சிறப்பானதுமல்ல. பக்தியேயாகட்டும் அல்லது ஜோதியேயாகட்டும் சலனமின்றி ஒரே நிலையுடனும், சாசுவதமாகவும், உறுதியாகவு மிருக்கவேண்டும். அப்படிக்கின்றி திடீரென்று மேல்கிளம்பிப் பாழ் செய்யும் எரிமலையைப் போவிராமல், சலனமின்றி அசைவதற்கரிதான இமயமலையைப் போலும்,எப்பொழுதும் பிரவாகித்து, வறட்சியையடையாத கங்கையைப்போலும், என்றென்றும் நடனம் புரிந்து, இளைப்பையே யடையாத நடராஜ மூர்த்தியைப் போலும் இருக்கவேண்டும்.

பரமானந்தத்தைத் தரக்கூடிய நந்தனது திவ்விய சரிதத்தை ஒருவாறுகூறி முடித்துவிட்டோம். நாம் இரவில் உறங்கும் தருவாயில் நடராஜரைப் பற்றியும் அவரது உண்மைப் பக்தனை பறைக்குலத்தில்தோன்றிய நந்தனைக் குறித்தும் சொற்பனங் காண்போமாக. அப்படிக்கண்ட கனவின் விஷயங்கள் நம்மனதில் பதியுமட்டும் மீண்டும் மீண்டும் அவர்களைக் குறித்துக் கனக் காண்போமாக.

எவ் விஷயத்தையும் தத்துவத்தின் கீழ்க் கொண்டுவரும் தத்துவ சாஸ்திரிகள் நந்தனை ஆதனூர் அடிமை யென்றும் அவனது சரித்திரம் கட்டுக்கதை யென்றும் ஒருபோதும் கருத மாட்டார்கள். நந்தன் ஆத்மா வென்றும், பரம் பொருளான பரமானந்தம் என்றுமே எண்ணுவார்கள். "பரமானந்தமே பிரம்மம், அவ்வானந்தத்தினின்றும் சராசரப் பொருள்கள் யாவும் உற்பவித்து ஆனந்தமாகவே காலங்கழிக்கின்றன. அவைகள் மரணமடையுங்கால் மீளவும் அப்பரமானந்தத்திலேயே மறைகின்றன" என்று தைத்திரோபநிஷத்து முழங்குகின்றதை அத்தத்துவசாஸ்திரிகள் மறவாமல் கவனத்தில் கொள்ளுவார்கள்.

நந்தன் அசுத்தமே உறைவிடமான பறைச்சேரியில் பிறந்தது ஒவ்வொருவரும் இரத்தத்தினாலும் சதையினாலும் ஆன விஷயத்தைக் குறிப்பிடுகின்றது. ஆகவே ஒவ்வொரு மனிதனுடைய தேகமும் பறைத்தன்மை வாய்ந்திருக்கப் பெற்றிருக்கின்றது. அது பரிசுத்தமடைய பிராயச்சித்தங்கள் செய்யவேண்டியது மிகவும் அவசியம். ஆகவே ஒவ்வொருவரும் உபநிஷத்துக்கள் என்ற புனித நீரில் மூழ்கி எழுந்திருக்கவேண்டும். அதுவே போதுமான பிராயச்சித்தம்.

நந்தன் வேதியனுக்குப் பிறவிமுதல் அடிமையாக விருந்ததைப்போல் நாமும் நமது உதரத்

திற்கு அடிமைகளாகவும் எல்லையற்ற ஆசைகளு க்கு ஊழியக்காரர்களாகவும் இருக்கின்றோம். வழி படுவதற்குப் பல்லாயிரம் சில்லரை தெய்வங்கள் நந்தனுக்கிருப்பதைப்போல நமக்கும் தேகசௌக் கியம், மூடநம்பிக்கை, டம்பம், வீண்பிரக்யாதி, சுயநலம் இன்னும் இவைபோன்றவைகள் இருக் கின்றன. இவைகளை அறவே ஒழித்தால் தான் நாம் நற்பதவி எய்தலாம்.

மௌனமாகவும், கம்பீரமாகவுமுள்ள கோபு ரங்களில் அறிவிற்கெட்டாததோர் ஆரிய தத்துவ மிருக்கின்றது. உயர்ந்த மதில்களிலும், திறந்த கோபுரவாயில்களிலும், ஆலயத்திலும் அறிதற் கரியதான தத்துவம் குடிகொண்டிருக்கின்றது.

தீட்சதர்கள் சொர்க்கத்தின்வாயில் காப்பாளி கள் போன்றவர்கள். அவர்கள் நந்தனைத் தீயில் குளிப்பித்து திருச் சன்னிதானத்தை யடையச் செய்ய வல்லவர்கள். பறைக்குலப்பக்த சிரோமணி யான நந்தனை நடராஜர் முன் நிறுத்திப் பொய் சொல்வோரும், கொடியரும் காணுதற்கரிய பகவா னது சன்னிதியை யடைந்து அவரில் தானும் ஒன் றெனக்கலந்தான். கற்பூரம் தீயில் மறைந்தொழி கின்றதைப்போலும், சர்க்கரையும் உப்பும் நீரில் கரைந்து மறைவதைப் போலவும், உறை பனிக் கட்டி கடலில் காணாது மறைகின்றதைப்போலும், பேரிரைச்சலிட்டு மோதுகின்ற அலை சத்தமின்றி

அடங்குவதைப் போலவும், நந்தன் தனிப்பெருஞ்சோதியில் ஐக்கியமானான்.

நந்தன் இறந்தான் என்று ஒருவரும் எண்ணக்கூடாது. ஏனென்றால் அவனது ஆன்மா என்றும் அழியாதது. அஃது இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் எப்பொழுதும் எக்காரணங் கொண்டும் நசிக்காது. இன்றைக்குச் சுமார் அறுநூறு வருடங்களுக்குமுன் பிறந்து, பிரிந்த நந்தனது திவ்விய சரித்திரத்தை இன்றும் நாம் படித்தும் கேட்டும் ஆனந்தப்படுகின்றோம். இதற்கு முக்கிய காரணம் அவனது இடைவிடாப் பக்தியேயன்றி வேறெதுவுமில்லை. ஒவ்வொரு வருடத்திலும் மார்கழி மாதத்தில் தென்னிந்தியப் பெண்கள் நல்லாடை தரித்து, அழகிய பணிகள் பூண்டு பறைக் குலத்தவன் பிராமணனானதைப் பற்றியும், நடராஜபிரானின் ஆனந்தத்தாண்டவத்தைப் பற்றியும் பாடுவார்கள். பாடி ஆனந்தக் கூத்துமாடுவார்கள்.

வாசகர்களே! அன்பு மிகுந்த வாசகர்களே! நாம்யாவரும் பகவானிடத்தில்பக்திகொள்ள முற்படுவோமாக. நந்தன் நின்ற விடத்தில் நாமும் நிற்க முன் வருவோமாக. எம்பெருமானின் சன்னிதியை யடைந்து விரைவில் நாமும் அவரது சரண நிழலையடைந்து களிப்பற்றிருப் போமாக.

'நந்தன் சரித்திரம் ஆனந்தம்' என்று கோபாலகிருஷ்ண பாரதியார் பாடியருளியிருக்கின்

ஞர். அத்தகைய சரித்திரத்தை மனதில் பதியப் படிப்பவரும் காதாரக் கேட்பவரும், மனமாரசிந் திப்பவரும் கருணைக்கடலான நடராஜமூர்த்தியின் அருளைப் பெற்று இன்புறுவாராக.

# நொண்டிச் சிந்து.

## இராகம் — புன்னாகவராளி.

“பழன மருங் கருணையும்—புலைப்
பாடியது கூறை வீடுதனில்
சுரையோ படர்ந்திருக்கும்—அதைச்
சுற்றிலும் நாய்கள் குரைத்திருக்கும்
பருந்தோடி வட்டமிடும்—இளம்
பச்சைப் பிசிதமேல் இச்சைகொண்டு
கோழிகூவுங் கூக்குரலும்—பாழுங்
கொல்லை யருகினில் வெள்ளெலும்பும்
நரம்புங் குவிந்திருக்கும்—பல
நெட்டி மிதந்திடுங் குட்டைகளில்
நண்டோ குடியிருக்கும்—சிறு
நத்தைக மடம்வ லுத்திருக்கும்
தோலூறுங் கேணிகளில்—வெகு
தொல்லைப் படும்வாடை சொல்லறியாப்
பரம்போ அடித்திருக்கும்—வயற்
பக்கங்க ளில்மெத்த நொக்கெலும்பும்
கிழித்தோல் நரம்புகளும்—அவர்க்
கீனமில் லைசிறு மீனுலரும்
தெருவில்விளை யாடிக்கொண்டு—அவர்
தெந்தினம் பாடுவர் சுந்தரமாய்
இலுப்பை மணியரையில்—கட்டி
இண்டந் தலைகளில் பூண்டிருக்கும்
சங்குதோடு காதணியும்—அருந்
தாவட மேயவர் தூவிடமாய்
மணியோ தரித்திருப்பார்—தெரு
வாசற் புறத்தினில் ஏசிக்கொண்டு

கொண்டாட்ட மாயிருப்பார்—கையைக்
கொட்டிக் கொண் டுதமக்கிட்டமுடன்
மதுவுண்டு கெக்கலிப்பார்—பறை
வாத்திய மும்வெகு நேர்த்தியுடன்
இருக்கும் புலைப்பாடி—அதில்
ஈசன் திருவடி நேசமுடன்
சாரும் ஒருபுலையர்—அவர்
சாதிமு றைதவ ருதவராம்
நந்தனு ரவர் பேராம்—வெகு
நல்லவரா மிந்தத் தொல்லுலகில்
அவரே சிவனடியார்—அவர்க்
காருமெ திரில்லை தாரணியில்
கோடிகோடி ஜன்மங்களோ—முன்னம்
குற்றம றச்செய்த நற்றவமே
அவதார மானதுவோ—ஈசன்
அன்புபு ரியும்பே ரின்பசுகம்
கொள்ளைகொள்ள வோபிறந்தார்—திருக்
கோயில்வ லஞ்சுழன் றுவலுடன்
செய்யும் பணிவிடைகள்—ஈசன்
சிந்தைம கிழ்ந்துகு ளிர்ந்திடவே
மத்தளபே ரிகைக்கும்—இசை
வார்கொடுத் துப்புறந் தோல்கொடுத்து
மறவாமலே தினமும்—நல்ல
வாசம்பெ ருகுங்கோ ரோசனையும்
தேவால யங்கள் தோறும்—தந்து
சித்தமு ருகிய பத்திவெள்ளம்
புரண்டோடிக் கங்குகரை—என்று
பேதம றியவொண் ணாது கண்டீர்

சாதியில் நீசரவர்—பேணிச்
சாருந்தொ ழின்முறை யாருடனே
திருப்புன்கூர் சென்றரனைக்—கண்டு
சேவிக்க வேண்டுமென் றுவலுடன்
நாளைப்போவே னென்றாராம்—தன்னை
நாடும் பறையர்க ளோடி வந்து
அண்ணே நீ போகாதே—நமக்
காவதென்ன அங்குப் போவதனால்
பார்ப்பார சாதியுண்டே—என்ன
பாடுப டும்முழக் காடுமங்கே
நமக்குந் திருநாளோ—அந்த
நாயமுண் டோஎன்ன மாயமிது
என்றே தடைசெய்தார்—சிவன்
வேடிக்கை தானென்று நாடிக்கொண்டே
அறியாது போலிருந்து—செம்பொன்
அம்பலத் தாடியைக் கும்பிடவே
ஆதனூர் தனிலிருந்து—விடும்
அம்புபோ லப்பறந் தையமின்றித்
தில்லை யருகில்வந்தார்—மனந்
தேறிக் கொண் டார்குறை யாறிக்கொண்டார்
கெண்டா மணியோசை—காதில்
கேட்குதென் றாரதைப் பார்க்கவென்றே
கொண்டாட்ட மாகிவந்தார்—கையைக்
குவித்துக்கொண் டேதனக் கம்பிட்டதோ
என்றே மனமகிழ்ந்தார்—திரு
வீதியி லேவந்து காதலுடன்
கண்டார் களையாறி—இரு
கண்களி லானந்தம் பொங்கிடவே

நின்ருர் மதிற் புறத்தே—வெகு
நேர்த்தி யென்ருரிதைப் பார்த்ததில்லை
பணிந்தார் பரவசமாய்—நல்ல
பாக்கிய சாலிக ளாகுமென்ருர்
இதுதானே தில்லைப்பதி—என்றே
எக்கலித் தாராடிக் கெக்கலித்தார்
ஐயாவுன் சந்நிதியோ—நான்
ஆசைகொண் டுவந்தேன் நேசமுடன்
தெருவில் பொடித்தூளை—அள்ளித்
தேகமு ழுதிலுந் தாகமுடன்
தரித்தார் திருநீருய்—நாலு
சாஸ்திர வேதங்கள் பார்த்துணரும்
பெரியோ ரிருக்குமிடம்—இந்தப்
பேயனி ருப்பது ஞாயமல்ல
நானே பறைச்சாதி—தில்லை
நாதன் தரிசனம் ஆதரவாய்
பண்ணுப் படுபாவி—இந்தப்
பாரிலிருப்பது சீரலவே
என்றே குளத்தோரம்—புக்கு
ஏங்கிநின் ருர்துயர் நீங்கிநின்ருர்
ஓயாப் பெருங்கவலை—கொண்டு
உள்ளங் குழைந்திட வெள்ளமெனக்
கண்ணீர் கரைபுரள—இரு
கைதொழு வாரவர் மெய்தொழுவார்
கீழே புரண்டழுவார்—ஒன்றுங்
கேள்வி முறையில்லை யோநாதா
என்றே தலைகுனிந்தார்—என்றன்
வேதனை யைக்கண்டே ஆதரிக்கும்

தெய்வம் கிடையாதோ—பாவி
சித்தந் தெளியவி ரத்திதந்து
வாவென் றழைப்பரோ—விண்ணில்
வானவர் போற்றிடும் ஊனமிலா
கனக சபைநடனம்—கண்ணிற்
காட்டக் களித்திட நாயடியேன்
வருந்தித் துதிப்பேனே—என்றன்
வாணு ளொழிவது வீணெனவே
அடடா இதென்னவென்று—சொல்லி
அந்நகர் வீதியைச் சுற்றிவந்தார்
இரவும் பகலோயார்—அதை
ஈசன் கண்டுவிசு வாசமுடன்
கனவி லுருவாகி—வந்து
காட்சி கொடுத்துக் கடாக்ஷித்தபின்
எரியி னிடைமூழ்கி—வெகு
இன்பம் பெருகிய அன்பர்துதி
வேத முனிவடிவாய்த்—தில்லை
வேதியர் கண்டிரு கைதொழுதார்
அங்கம் புளகிதமாய்ச்—செம்பொன்
அம்பலத் தாடிய சம்பிரமம்
கண்டார் மகிழ்ந்தாரே—இன்பக்
கடலில் முழுகியின் புற்றாரே.''

கோபால கிருஷ்ண பாரதியார்.

…தோழன்.

…ணரவேண்

டிய … டக்கின்றன.

இதுவரையில் இம்மாதிரியா… நூல் …வெளிவந்தது கிடையாது. உபாத்திமைத் தொழிலில் பயிற்சி பெற டிரெயினிங் ஸ்கூல்களில் படிக்கும் மாணவர்களுக்குச் சரியான புத்தகம் கிடைக்காததனுல் பெரிதும் கஷ்டப்பட்டு வருகின்றனர். அக்கஷ்டத்தை இப்புத்தகம் போக்கும் என்பதில் தடையில்லை. இதில் கண்டிருக்கும் விஷயங்களில் முக்கியமானவை:—

உபாத்தியாயர்—அவரது வாழ்வும் வேலையும்—உரிமைகளும் கடமைகளும்—அவரது லக்ஷணங்கள்—பஞ்சேந்திரியப் பயிற்சி—சிறுவர்களது மனோதத்வம்—தேகாப்பியாசப் பயிற்சி—உணர்ச்சியும் விஷயங்கள் மனதில் நுழைவதும்—பாடங்களின் வகைகளும் பிற்கால வாழ்க்கையில் அவைகளி பயனும்—கிண்டர் கார்டன்—பாடக் குறிப்புகள்—அவைகளின் அவசியமும் எழுதும் விதமும்—போதனைக்குரிய சாதனங்கள்—பாடங்கற்பிக்கும் முறைகள் முதலியன.

200 பக்கங்கள் ரூ. 1—0—0.

| | | | |
|---|---|---|---|
| அரவிந்தன் அணா 6. | | ராணா அமிர் சிங் | அணா 3 |
| பத்திராயு ,, 6. | | இராஜாமணி | ,, 12. |
| உமாதேவி ஹைமவதி ,, 6. | | கைத்தொழில் வணிக இரகசிய விளக்கம் | ரூ. 1-8-0 |


மதராஸ் ப்ரீமியர் கம்பெனி,

புத்தக வியாபாரிகள், பிரசுரகர்த்தர்கள்

முத்தியாலுபேட்டை, சென்னை.